Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 167

வெள்ளிக்கிழமை 12 மே 2023

சித்திரை 29 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள்

# ஜனாதிபதியுடன் சந்திப்பு: முடிவுகள் ஏதும் இல்லை!

யாழ்ப்பாணம், மே 12

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் உருப்படியான - சொல்லிக்கொள்ளும்படியான முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை. ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாலை5 மணி முதல் இரவு 7 மணிவரையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள அனைத்துத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது. »11

**அளவுக்கு அதிகமாகக் காணிகளை ஆக்கிரமித்ததை ஏற்றுக்கொண்டது தொல்பொருள் திணைக்களம்!**

**தையிட்டி விகாரை பற்றி ரணிலுக்குத் தெரியாதாம்**

**12 அரசியல்கைதிகள் விரைவில் விடுவிப்பு**



## மன்னாரில் நேற்றையதினம் முள்ளிவாய்க்கால் கஞ்சி!

மன்னார், மே 12

மன்னார் மாவட்டத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்றிட்டம், பலநூறு பொதுமக்களின் பங்கேற்புடன் நேற்றைய தினம் எழுச்சியாக முன்னெடுக்கப்பட்டது. மன்னார் மருத்துவமனைக்கு முன்பாக நேற்றுக் காலை முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டு மக்களுக்குப் பகி »11

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், மே 12

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பகுதியில், கிணற்றிலிருந்து குடும்பப் பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். ஆர்.நியாளினி (வயது - 37) என்பவரே இவ்வாறு சடலமாக மீட் »10

வெடுக்குநாறிமலை

## ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் பூசகர் உள்ளிட்ட நால்வர் கைது

வவுனியா, மே 12

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் பூசகர் மற்றும் ஆலயநிர்வாக உறுப்பினர்கள் மூவர் என நால்வர் நெடுங்கேணி பொலிஸா »11

**நீதிமன்றத்தால் அவர்கள் விடுவிப்பு**

## சிறுமிகளைக் கடத்தமுற்பட்ட இரண்டு பேர் மடக்கிப்பிடிப்பு!

மன்னார், மே 12

தலைமன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் கிராமப் பகுதியில் வியாபாரப் பொருள்களை ஏற்றிவந்த வாகனமொன்றில் இருந்தவர்கள், சிறுமிகளுக்கு இனிப்புப் பொருள்களை வழங்கி அவர்களைக் கடத்த முற்பட்ட நிலையில், பொதுமக்களின் உதவியுடன் அவர்கள் மடக்கிப்பிடிக் »11

பயங்கரவாத சட்டவரைவு

## 500 மில். டொலர் ஜி.எஸ்.பி. இழப்பு!

ஹர்ஷ டி சில்வா எச்சரிக்கை

கொழும்பு, மே 12

இலங்கையின் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு, ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை இலங்கை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஐக்கிய »11




வெடுக்குநாறிமலை விவகாரம்:

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வவுனியாவில் நேற்றுப் போராட்டம்!

வவுனியா, மே 12

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் பூசகர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டமை »11

திருகோணமலை நகரில்

## புதிதாக முளைக்கும் 4 அடி புத்தர் சிலை

தாய்லாந்திலிருந்து பிக்குகள் வந்து வைப்பார்களாம்.

யாழ்ப்பாணம், மே 12

திருகோணமலை நகரில் நெல்சன் திரையரங்குக்கு முன்னால் தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமித்துள்ள இடத்தில் 4 அடி உயரமான புத்தர் சிலை நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை »10



## அரகலய போராட்டக்காரர்களுக்கு உடனடியாகப் பாதுகாப்பு வழங்குக

நாடாளுமன்றில் சஜித் வலியுறுத்து »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயிலும் இல்லத்தை விடுவிக்காவிட்டால் சாகும்வரை உணவு தவிர்ப்புப் போராட்டம்

## மாவீரர்களின் பெற்றோர் தெரிவிப்பு

**முல்லைத்தீவு, மே 12**

**இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மாவீரர் துயிலும் இல்லம் விடுவிக்கப்படும்வரை உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுக்கத் தயார் என விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்கள் மூவரின் பெற்றோர் அறிவித்துள்ளனர்.**

மூன்று தசாப்த காலக் கொடூர உள்நாட்டுப் போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு ஏதுவாக முல்லைத்தீவு அளம்பில் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள காணியைத் தம்மிடம் மீள வழங்கவேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போர் நிறைவடைந்து 14 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், 2023ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி, போரில் உயிரிழந்த தமது உறவினர்களை நினைவுகூர்ந்து, வடக்கு, கிழக்கில் நினைவு தினத்தைக் கடைப்பிடிக்கத் தயாராகி வருகின்றனர்.

வடக்கு மற்றும் கிழக்கில் ஏறக்குறைய 20 ஆயிரத்து 400 தமிழ் போராளிகளின் புதைகுழிகள் அடங்கிய சுமார் 25 துயிலும் இல்லங்கள் இராணுவத்தால் அழிக்கப்பட்டு நினைவுச் சின்னங்களும் தகர்க்கப்பட்டன. அரசியல் தலைமைகளும் அதிகாரிகளும் தமது கோரிக்கைக்கு தீர்வு வழங்கத் தவறினால் திட்டமிட்டவாறு உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று பெற்றோர் தெரிவிக்கின்றனர். இலங்கை இராணுவத்தின் 23ஆவது சிங்கப் படையணியினர் தமது முகாமுக்கு அருகாமையில் அமைந்துள்ள அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தை இழிவுபடுத்தியுள்ளனர் என்று முத்தையன்கட்டில் வசிக்கும் தந்தையொருவர் ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

"எங்கள் பிள்ளைகள் புதைக்கப்பட்ட இடத்தில் இராணுவத்தினர் விவசாயம் செய்கிறார்கள், கிரிக்கெட் விளையாடுகிறார்கள், உணவகம் நடத்துகிறார்கள். எங்கள் பிள்ளைகளுக்கு அமைதியான முறையில் அஞ்சலி செலுத்துவதற்கு அவர்கள் உடனடியாக கல்லறையை விட்டு வெளியேற வேண்டும்." என முருகையா ராசையா என்ற தந்தை தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவம் தமது பிள்ளைகளின் துயிலும் இல்லத்தை பல்வேறு வர்த்தக மற்றும் பொழுதுபோக்கு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தியமை தொடர்பாக முன்னாள் தமிழ் புலி உறுப்பினர் ஒருவரின் தந்தை மற்றும் இரண்டு உறுப்பினர்களின் தாய்மார்கள் வேதனை தெரிவித்துள்ளனர். அளம்பில் மாவீரர் மயானம் அமைந்துள்ள காணியை மீளப் பெற்றுக்கொடுக்கும் வகையிலும், புதைக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு பெற்றோர் அஞ்சலி செலுத்தும் வகையிலும், அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர். (எ-இ)



## தப்பியோடுவதற்காகவே அந்த மாதிரி நடித்தேன்!

### ஹந்தகம தெரிவிப்பு

கொழும்பு, மே 12

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக்கப்பட்டு, சமூக ஊடகங்களில் புகழடைந்தவர்களில் ஒருவரான முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் மஹிந்த ஹந்தகம, அந்த நாள்களை நினைவுகூர்ந்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் கையில் சிக்கித் தாக்குதலுக்கு இலக்கானபோது, உயிர் பிழைப்பதற்காகவும் அனுதாபத்துக்காகவும் நடித்தேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு மே 9 அன்று, மஹிந்த ஹந்தகமவின் கோலம் இணையம் முழுவதும் வைரலானது. தன்னை புகழடைய வைத்து, தன்னை அரசியல் தலைவராக்கியதற்காக அரகலயவுக்கு நன்றி தெரிவிக்கின்றேன் என்று அவர் கூறினார்.

இப்போது, அரகலயவின் பின்னர் நடந்தவற்றின் காரணமாக நான் மிகவும் பிரபலமாகிவிட்டதால் எனக்கு எந்த விளம்பரமும் தேவையில்லை என்று ஹந்தகம கூறினார். அரகலய தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஹந்தகம, இது ஒரு சதி எனவும் செயற்பாட்டாளர்கள் அதைக் கண்டுகொள்ளாமல் உள்ளனர் என்றும் குறிப்பிட்டார். தான் பெய்ரா ஏரியில் குளிப்பது வழக்கமான விடயம் எனவும், அது தனக்கு புதிதல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## மரக்கறி விலை மீண்டும் உயர்வு

கொழும்பு, மே 12

சந்தையில், வீழ்ச்சியடைந்திருந்த மரக்கறிகளின் விலை மீண்டும் உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையே இதற்கான பிரதான காரணம் என ஒன்றிணைந்த விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் மனிங் வர்த்தக சங்கம் ஆகியவற்றின் பொருளாளர் நிமல் அத்தநாயக்க தெரிவித்தார்.

போஞ்சி, தக்காளி உள்ளிட்ட மரக்கறிகளின் விலை கணிசமான அளவில் உயர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-14-இ)

## கைதி ஒருவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சிறைக்கைதி ஒருவர் நேற்று வியாழக்கிழமை உயிரிழந்துள்ளார்.

உடுவில் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான யோகராசா கஜன் (வயது-32) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சிறுநீரக செயலிழப்பு காரணமாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சில வாரங்களாக சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-14-இ)

## பிளாஸ்ரிக் பொம்மைகள் குழந்தைகளுக்கு ஆபத்து

### சுற்றாடல் அதிகாரசபை எச்சரிப்பு

கொழும்பு, மே 12

பிளாஸ்ரிக் பொம்மைகள் சிறு குழந்தைகளின் ஆரோக்கியத்துக்கு தீங்கு விளைவிப்பதால் பிளாஸ்ரிக் பொம்மைகளின் உற்பத்தி மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்த மத்திய சுற்றாடல் அதிகாரசபை கவனம் செலுத்தியுள்ளது.

இதுதொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் திண்மக்கழிவு முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் தெரிவிக்கையில்,

பிளாஸ்ரிக் பொருள்களால் குழந்தைகளுக்கு பெரும் உடல்நலக் கோளாறுகள் ஏற்படுகின்றன. பொம்மைகளை குழந்தைகளுக்கு வாங்கிக் கொடுப்பதில் பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும்.

மரத்தால் செய்யப்பட்ட பொம்மைகளை குழந்தைகளுக்கு கொடுக்கவேண்டும்.

பிளாஸ்ரிக் பொம்மைகளின் உற்பத்தி மற்றும் விற்பனையை மட்டுப்படுத்தி கட்டுப்படுத்த மத்திய சுற்றாடல் அதிகாரசபை கவனம் செலுத்தியுள்ளது - என்றார். (ச-இ)

## ரயில் சேவை வழமைக்கு

கொழும்பு, மே 12

ரயில் சேவை நேற்றுமுதல் வழமைக்குத் திரும்பியுள்ளது என தொடருந்து நிலைய அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பிரதிப் பொதுமுகாமையாளர் பதவிக்கு அதிகாரியொருவரை நியமிப்பது தொடர்பான பிரச்சினையை முன்வைத்து ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். அதனால் நாட்டின் பல பாகங்களில் உள்ள ரயில் நிலையங்களில் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்திருந்தனர்.

இந்தநிலையில் நேற்றுமுதல் ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பின. தமது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படவில்லை எனில், அடுத்தவாரம் தொடர் தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படும் என ரயில் நிலைய அதிபர்கள் சங்கத் தலைவர் சுமேத சோமரட்ன தெரிவித்தார். (ச-இ)

## 'புலிட்சர்' விருதுக்கான இறுதிச்சுற்றில் எரங்க!

கொழும்பு, மே 12

எரங்க ஜெயவர்த்தன என்ற அசோசியற்றெட் பிரஸ் நிறுவன ஒளிப்படப்பிடிப்பாளர் 'புலிட்சர்' விருதின் இறுதிச்சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் அரகலய போராட்டம் நடைபெற்றபோது தத்ரூபமான ஒளிப்படங்களை எடுத்தமைக்காக இவர் 'புலிட்சர்' விருதின் இறுதிச்சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

1978ஆம் ஆண்டு பிறந்த இவர் பாடசாலை மாணவனாக இருந்த காலத்திலேயே ஒளிப்படக்கலையில் ஆர்வத்துடன் செயற்பட்டு பல தரமான ஒளிப்படங்களை எடுத்துள்ளார். 1996ஆம் ஆண்டு ஐலண்ட் பத்திரிகையில் இணைந்து கொண்ட எரங்க இன வன்முறைகளின்போது பல சிறந்த ஒளிப்படங்களை எடுத்துள்ளார். தற்போது அசோசியற்றெட் பிரஸ் நிறுவன ஒளிப்படப்பிடிப்பாளராக செயற்பட்டுவரும் எரங்க கடந்த வருடம் அரகலய போராட்டம் நடைபெற்ற வேளையில் ஜனாதிபதி மாளிகையினுள்ளும் பிரதமரின் இல்லத்தினுள்ளும் போராட்டக்காரர்கள் நுழைந்து ஜிம்மில் பயிற்சி பெறுதல், நீச்சல் தடாகத்தில் நீந்துதல், மதில் பாய்தல் போன்ற பல தத்ரூபமான ஒளிப்படங்களை எடுத்திருந்தார். (எ-6)

## மின்சார ஓட்டோக்கள் விரைவில் நடைமுறை


பெற்றோலில் இயங்கும் முச்சக்கர வண்டிகளை மின்சார முச்சக்கர வண்டிகளாக மாற்றுவதற்கான விசேட வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என மோட்டார் போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. முதற்கட்டமாக பெற்றோலில் இயங்கும் 300 முச்சக்கரவண்டிகள் மின்சார முச்சக்கரவண்டிகளாக மாற்றப்படவுள்ளன. விரைவில் அனைத்து முச்சக்கரவண்டிகளும் இந்த நடைமுறையில் கொண்டுவரப்படும் என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 வகை காய்ச்சல் நாட்டில் பரவுகிறது

## மருத்துவர்கள் எச்சரிக்கை

**கொழும்பு, மே 12**



**நாட்டில் தற்போது மூன்று வகையான காய்ச்சல்கள் பரவி வருகின்றன. காய்ச்சல் நீடிக்குமாயின் உடன் பரிசோதனைகள் மேற்கொண்டு அவதானத்துடன் இருக்க வேண்டும் என மருத்துவர்கள் எச்சரித்துள்ளனர்.**

கடந்த சில நாள்களாக டெங்கு, இன்புளுவன்ஸா மற்றும் எலிக் காய்ச்சல் மிக வேகமாகப் பரவி வருகின்றது. குழந்தைகளுக்கு இருமல், சளி இருந்தால் முகக் கவசம் அணிந்து வீட்டிலேயே வைத்திருப்பது நல்லது.

தலைவலி, வாந்தி, உடல்வலி, சோர்வு போன்ற அறிகுறிகள் மூன்று வகையான காய்ச்சலிலும் இருக்கின்றன.

குழந்தைகளுக்கு 2 அல்லது 3 நாள்களுக்கு மேலாக காய்ச்சல் நீடிக்குமாயின், இரத்தப் பரிசோதனை மேற்கொண்டு சிகிச்சை அளிக்கவேண்டும்.

இந்த மூன்று வகையான காய்ச்சலிலும் டெங்குக் காய்ச்சல் வேகமாகப் பரவுகிறது. டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய சாத்தியம் காணப்படும் இடங்களை சுத்தமாக வைத்திருந்து மக்கள் விழிப்புடன் செயற்படவேண்டும் என குழந்தைகள் நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா அறிவுறுத்தியுள்ளார். (ச-இ)

## விடுதியிலிருந்து காணாமற்போன மாணவர்கள் மீட்பு!

மாங்குளம் பகுதியில் அமைந்துள்ள குருமடம் ஒன்றில் தங்கி நின்று கல்வி கற்று வந்த இரண்டு மாணவர்கள் காணாமற்போன நிலையில், இருவரும் அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மீட்கப்பட்டனர்.

மன்னார் முத்தரிப்புத்துறை கிராமத்தைச் சேர்ந்த மாணவர் ஒருவரும், வவுனியாவைச் சேர்ந்த மாணவர் ஒருவரும் குருமடம் ஒன்றில் தங்கி நின்று அங்குள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்று வருகின்றனர். பாடசாலைக்குச் செல்வதற்காக பழுதடைந்த துவிச்சக்கரவண்டியைத் தயார்படுத்துவதற்காக விடுதியிலிருந்து வெளியேறிய இரு மாணவர்களும், நீண்ட நேரமாகியும் விடுதி திரும்பவில்லை.

அவர்கள் இருவரும் தமது வீடுகளுக்குச் சென்றுவிட்டார்களா? என்பது தொடர்பில் பெற்றோரிடம் விடுதி நிர்வாகத்தால் கேட்டறியப்பட்டு. அங்கு செல்லவில்லை என்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் பொலிஸாரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

இந்த நிலையிலே இரண்டு நாள்களின் பின்னர் மாணவர்கள் இருவரும் அநுராதபுரம் பகுதியில் மீட்கப்பட்டனர். மாணவர்களை யாரேனும் கடத்திச்சென்றார்களா? அல்லது அவர்களாகவே அங்கு சென்றனரா? என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-14,110)

## நுங்கு திருட்டு அதிகரிப்பு பனை உற்பத்தி பாதிப்பு!

*காணி உரிமையாளர்கள் விசனம்*

சாவகச்சேரி மே 12

யாழ்.மாவட்டத்தில் நுங்கு விற்பனை சூடுபிடித்துள்ளதால் ஆள்களற்ற காணிகளில் பெருமளவு நுங்குகள் இனந்தெரியாதோரால் திருடப்படுகின்றன. அதனால் இந்தமுறை பனை உற்பத்திகள் இல்லாது போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என காணி உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கைதடி மற்றும் நாவற்குழி ஆகிய பகுதிகளிலுள்ள ஆள்கள் இல்லாத காணிகளில் இரவுவேளையில் நுங்குகள் இனந்தெரியாதோரால் குலை குலையாக வெட்டி எடுத்துச் செல்லப்படுகின்றன.

முன்பதாக காணிகளில் விழும் பனம் பழங்கள் மூலம் பனாட்டு மற்றும் அவற்றின் விதைகள் மூலம் பனம்பாத்தி அமைத்து பனங்கிழங்கு பெறப்படும்.

தற்போது பனைமரங்களிலிருந்து நுங்கு குலைகளாகத் திருடப்படுவதால் இந்த வருடம் பனாட்டு மற்றும் பனங்கிழங்கு உற்பத்தி கேள்விக்குள்ளாகியுள்ளது என அவர்கள் மேலும் குறிப்பிட்டனர். (ச-9)

## நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு காணி உரிமமாற்றம் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலாக உள்ள செம்மணியில் 30 ஏக்கர் அரச காணியை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரிமமாற்றம் செய்வதற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு சாதகமான பதிலை வழங்கவில்லை. உரிம மாற்றம் தொடர்பில் விரிவாக ஆராய்ந்து முடிவெடுப்பது என்று ஒருங்கிணைப்புக்குழு தீர்மானித்துள்ளது.

செம்மணியில் 290 ஏக்கர் நிலம் உப்பளத்துக்குச் சொந்தமானது. அந்தப் பகுதியில் யாழ்ப்பாண நகரத்தின் நெரிசலைக் குறைக்கும் வகையில் பல்வேறு அபிவிருத்திகளை முன்னெடுக்க நல்லாட்சிக் காலத்தில் திட்டமிடப்பட்டது. பேருந்து நிலையம், அரச திணைக்களங்கள், பொழுதுபோக்கு இடங்கள், விளையாட்டுத்திடல் என்பன அமைக்க முன்மொழியப்பட்டிருந்தாலும், அந்த நிலம் தொடர்பான சாத்தியக்கூற்று ஆய்வு மேற்கொள்வதற்கு பெருந்தொகைப் பணம் தேவையென்பதால் அது கிடப்பில் போடப்பட்டது.

தனியார் முதலீட்டாளர் ஒருவர் செம்மணியில் 30 ஏக்கரில் விளையாட்டுத்திடல் அமைப்பதற்கான யோசனையை முன்வைத்துள்ளார். அந்தக் காணி தொடர்பான சாத்தியக்கூற்று ஆய்வு மேற்கொள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபை இணங்கியுள்ளது. சாத்தியக்கூற்று ஆய்வை தாம் முன்னெடுப்பதானால் குறித்த அரச காணியை தமது திணைக்களத்துக்கு உரிமமாற்றம் செய்து தரவேண்டும் என்று கோரியுள்ளது.

இதற்கு அமைவாகமே மேற்படி கோரிக்கைக்கான அனுமதி கோரி யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. இருப்பினும் அதற்கான அனுமதி கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வழங்கப்படவில்லை. (ஒ-5)




**ஆட்டைக் கடிச்சு மாட்டைக் கடிச்சு கடைசியா மனிசரைக் கடிச்ச கதையாய், எல்லாரிலையும் துடக்குப் பாக்கிற முன்னணிக்காரர் கடைசியில மீடியாக்காரரிலையும் துடக்குப் பார்க்க வெளிக்கிட்டிருக்கினம்.**

**தையிட்டி விகாரைக்கு எதிரா முன்னணிக்காரர் போராட்டம் செய்ய வெளிக்கிட்டு, அதில நாலுபேரை பொலிஸ்காரர் முற்றுகைக்குள்ள முடக்கின உடன, முன்னணிக்காரர் செய்த முதல்வேலை, எல்லா மீடியாக்காரருக்கும் போன் பண்ணி அங்க வரச்சொன்னதுதான். ஏனெண்டால் மீடியாக்காரர் வந்தால்தான் பொலிஸ் ஏதும் ஏடகூடமாச் செய்தால் அதை உடன உலகத்துக்கு தெரியப்படுத்தலாம். மீடியாக்காரர் நடக்கிற எல்லாத்தையும் வெளியால கொண்டு வந்திடுவாங்களோ எண்ட பயத்தில போராட்டம் செய்யிறவை மேல பொலிஸ் பெரிசாக் கைவைக்காது. இதுக்காகத்தான் முன்னணிக்காரர் அந்த இரவுமுழுக்க தங்களோட பக்கபலமா மீடியாக்காரரையும் நிக்கச்சொல்லி கெஞ்சாத குறையாக் கேட்டவை. அவை அப்பிடிக் கேட்டிருக்காட்டியும் மீடியாக்காரர் நிண்டுதான் இருப்பினம். ஏனெண்டால் மீடியாக்காரர் இப்பிடி துடக்குப் பார்க்கிற ஆக்கள் இல்லைத்தானே. எங்கையெல்லாம் அநியாயம் நடக்குதோ அதை வெளியில கொண்டுவாறதுதானே அவையின்ர வேலை.**

**இப்பிடி தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தை இரவுபகலா நிண்டு 'கவர்' பண்ணின மீடியாக்காரர் சிலர் போராட்டம் முடிஞ்சகையோட, கருத்துக்கேக்கிறதுக்காக முன்னணிக்காரரிட்ட மைக்கை கொண்டு போய் நீட்டியிருக்கினம். அப்ப 'களைச்சுப் போனம். பிறகு ஒருநாளைக்கு சொல்லுறம்' எண்டிருக்கினம். நித்திரை முழிச்சு மூண்டுநாளாப் போராடினவை களைச்சுப் போயிருப்பினம், எதுக்கு கரைச்சல் படுத்துவான் எண்டு மீடியாக்காரர் அங்கால வந்திட்டினம். ஆனால் கொஞ்சநேரத்தில தங்கட கட்சிக்காரரின்ர செல்போன்களுக்கு முன்னால நிண்டு அதே முன்னணிக்காரர் போராட்டம் பற்றி முழங்கத் தொடங்கிட்டினம். மீடியாக்காரருக்கு ஒரே குழப்பம். 'தங்களுக்கு களைச்சுப் போட்டம் எண்டு சொல்லிட்டு இப்பிடி மணித்தியாலக் கணக்கில உரையாற்றுகினமே' எண்டு நினைச்சபடி, அவையிட்டையே போய் 'ஏனண்ணை இப்பிடிச் செய்தனீங்கள்?' எண்டு கேட்டிருக்கினம். அதுக்கு 'நீங்கள் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி உங்கட பேஸ்புக்கில போட்டிருக்கிறீங்கள். அதால உங்களுக்கு கருத்துக்கூற நாங்கள் விரும்பேலை' ,எண்டு சொல்லியிருக்கினம்.**

**அடுத்தநாள் கந்தரோடையில விகாரை கட்டுப்படப்போகிற காணிக்கு முன்னால முன்னணிக்காரர் போராடேக்க ஒரு மீடியாக்காரரும் எட்டியும் பாக்கேலை. பிறகு அவையின்ர கட்சிக்காரர் இந்தச் செய்தியைப் போடச்சொல்லி மீடியாக்களைக் கெஞ்சிக் கூத்தாடித்தான் போடப்பண்ணினவையாம்.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்கில்ஸ் பூட்சிற்றியுடன் ஐ.ஓ.சி. எரிபொருள் நிலையம்

கொழும்பு, மே 12

கார்கில்ஸ் பல்பொருள் அங்காடியுடன் இணைந்ததாக ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையங்கள் திறக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமது வாடிக்கையாளர்களுக்கு உன்னதமான சேவையை வழங்கும் நோக்குடனே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் கார்கில்ஸ் குழும பிரதித்தலைவர் ரஞ்சித் பேஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்தத் திட்டத்தின் பிரகாரம் முதலாவது ஐ.ஓ.சி.எரிபொருள் நிரப்பு நிலையம் வத்தளையிலுள்ள கார்கில்ஸ் பல்பொருள் அங்காடியுடன் இணைந்ததாக கடந்த 3ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதேபோல் நாடுமுழுவதும் உள்ள கார்கில்ஸ் பல்பொருள் அங்காடியுடன் இணைந்ததாக ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் திறப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது - என்றுள்ளது. (ஒ-14,6)

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம், மே 12

திருநாவுக்கரசு நாயனார் குருபூசையை முன்னிட்டு நடத்தப்பட்ட திருமுறை மனனப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு, வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஆலய சைவசமய அபிவிருத்திக்கழகத் தலைவர் இரா. செல்வவடிவேல் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வண்ணை நாவலர் மகா வித்தியாலய அதிபர் க.கலியுகன் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 12

சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம், எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 18 தினங்கள் நடைபெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் 3ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.51 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் என்று ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (ஒ-14)

## 'சாநிழல்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 12

கே.டானியலின் "சாநிழல்" நூல் வெளியீடு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், நூல் வெளியீட்டுரையை அசுரநாதன், ஆய்வுரையை பேராசிரியர் அ.மார்க்ஸ் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (ஒ-14)

## திருநாவுக்கரசுநாயனார் குருபூசை

யாழ்ப்பாணம், மே 12

சைவசமய குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசுநாயனார் குருபூசை நிகழ்வு கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலயத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிமுதல் திருநாவுக்கரசுநாயனார் அருளிய திருமுறை, பண்ணுடன் ஓதப்படும். தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு விநாயகப் பெருமானுக்கும், திருநாவுக்கரசு நாயனாருக்கும் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

அதனைத்தொடர்ந்து மதியம் 12.30 மணிக்கு அடியவர்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும் என ஆலய நிர்வாகசபையினர் தெரிவித்துள்ளனர். (ஒ-14,66)

# தாதியரும் ஒரு தாயாரே!!

■ சஸ்ரூபி சதீஸ்
சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை, யாழ். மருத்துவபீடம்



**சர்வதேச தாதியர் தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.**


இங்கிலாந்தில் செல்வச் செழிப்புமிக்க குடும்பத்தில் பிறந்து, பெற்றோரின் விருப்பத்துக்கு மாறாக தாதியர் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் புளோரன்ஸ் நைட்டிங்கேல். நவீன தாதியியல் முறையை உருவாக்கி தாதியர் பயிற்சிப் பள்ளியையும் தொடங்கியவர். 1844, டிசெம்பரில் லண்டனிலிருந்த ஆதரவற்றோர் விடுதியில் உயிரிழந்த ஏழையின் சாவே இவரது பாதையைப் புரட்டிப்போட்டது. வறியவர்களுக்கென்று யாருமே உதவி புரிய இல்லையே? என்று மனம் நொந்து போனார். இதனைத் தொடர்ந்து புளோரன்ஸ். ஆதரவற்றோர் விடுதிகளில் மருத்துவ வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக முன்னணியில் நின்று வாதாடினார். அன்றுமுதல் வறியவர்கள் மீதும், இயலாதவர்கள் மீதும் அவரது அக்கறை நீண்டு கொண்டே சென்றது.

அதன் முத்தாய்ப்பாக அமைந்தது ஒரு சம்பவம். 1854 இல் கிரிமியாவைக் கைப்பற்றிய ரஷ்யாவுக்கு எதிராக இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகள் போர் தொடுத்தன. கிரிமியன் போரில் பாதிக்கப்பட்ட படையினர் குத்துயிரும் குலையுயிருமாக வீழ்ந்து கிடந்தனர். அவர்களுக்கு யாருமே உதவ முன்வரவில்லை. இறக்கும் தருவாயில் பலர் முனகலுடன் இருந்தனர்.

அந்த இராணுவ மருத்துவமனைக்கு 38 தாதியருடன் சென்றார் புளோரன்ஸ். வசதி குறைவுகள் அங்கு காணப்பட்டாலும் தன்னால் முடிந்தவரை இராணுவத்தினருக்கு சிகிச்சை வழங்கினார். உயிருக்குப் போராடிய முழுப் படையையும் தன்னிடமிருந்த குறைந்த மருத்துவ வசதி மற்றும் நிறைந்த அன்பினாலும் குணப்படுத்தினார். அந்த இரவு வேளைகளில் கையில் விளக்கை ஏந்திய வண்ணம் நோயாளிகளிடம் சென்று நலம் விசாரித்து மருந்துகளையும் வழங்கி வந்தார். தங்களைக் காக்க 'விண்ணுலகிலிருந்து மண்ணுலகுக்கு வந்த தேவதை' என இராணுவ வீரர்கள் நைட்டிங்கேலை கௌரவித்தனர். அதனால்தான் அவர் 'கையில் விளக்கேந்திய பெருமாட்டி' என்றும் அழைக்கப்பட்டார். அவர் பிறந்த மே 12ஆம் நாளே உலக தாதியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது. தாதியர்களுக்கென்றே தனி மரியாதையையும், கண்ணியத்தையும் உருவாக்கிக் கொடுத்தவர்.

உலகமே கொரோனாவின் பிடியில் சிக்கிக்கொண்டிருந்தபோது, அவர்களை மீட்க அயராது உழைத்துக்கொண்டிருந்தவர்கள் தாதியர்கள். உலகையே முடக்கிப் போட்ட கொரோனாவால், தாதியர்களின் சேவையை முடக்க முடியவில்லை. கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களை அவர்களின் சொந்த குடும்ப உறுப்பினர்களே தொடத் தயங்கும்போது, அவர்களது உயிரையும் பொருட்படுத்தாது, கொரோனாவில் தங்களுடைய சேவையை சிறப்பாக ஆற்றியவர்கள் தாதியர்கள்.

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** பிணக்குகள் நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். உணவு விடயத்தில் கவனம் தேவை. நல்ல செய்தி கிடைக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்களால் செலவுகள் ஏற்படும். காரியம் அனுகூலமாக முடியும்.

**மிதுனம் :** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறை முகத் தொல்லைகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படும்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும்.சகோதர வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். சுபநிகழ்ச்சிக் கான பேச்சு சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் கிடைக்கும். கணவன் எதிரிகளால் இடையூறுகள் நீங்கும்.

**கன்னி:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உங்கள் [illegible] ஏற்றுக்கொள்வார்கள். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். மன அமைதி பாதிக்கப்படலாம். அனுசரித்துச் செல்வது நல்லது.

**விருச்சிகம் :** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். எதிர்பாராத பொருள் சேர்க்கை உண்டு. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பேசும்போது பொறுமை அவசியம்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும்.

**கும்பம்:** கருத்துவேறுபாடுகள் நீங்கும். செலவுகள் அதிகரிப்பதால் கையிருப்பு குறையும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இலங்கையைக் கண்காணிக்கும் இந்தியா

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பேச்சு நேற்று ஆரம்பமாகியுள்ளது. இதுவொன்றும் புதிய விடயமல்ல. கடந்த காலங்களிலும் இவ்வாறு பல பேச்சுக்கள் நடந்திருக்கின்றன. தமிழர் தரப்புக்கள் தமது தீர்க்கப்படாத பிரச்சினைகள் என்று பட்டியலிட்டிருப்பதை அன்றிலிருந்து இன்றுவரை சொல்லி வருகின்றன. ஆனால், எவையுமே தீர்க்கப்படுவதில்லை. மாறாக ஒவ்வொரு பேச்சுக்களின்போதும் புதிதாகக் கேட்பது போன்ற பாவனைகளே ஆட்சியாளர்களால் காண்பிக்கப்படுகின்றன. சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போல தமிழர் தரப்புக்களும் மீண்டும் மீண்டும் அதையே– பழைய பல்லவியையே – ஒப்புவிக்கின்றன. ஆனால், இவற்றிலிருந்து இம்முறை பேச்சுச் சூழல் வித்தியாசப்படுகின்றது. அதற்காக இந்த முறை எல்லாமே சாதகமாக நடந்து விடும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால், சர்வதேச நாடு ஒன்றின் தலையீடு தேவை என்பதை தமிழர் தரப்புக்கள் கோரி நின்றாலும், இலங்கை அரசாங்கம் அப்படிப்பட்ட தேவைப்பாட்டை நிராகரித்து வந்திருக்கின்றது. இதனால் தமிழர் விவகாரங்களில் ஈடுபாடுள்ள சர்வதேசத் தரப்புக்களாலும் அதில் தலையிட முடியாத சூழல் இருக்கின்றது. இந்தியா இந்தப் பிராந்தியத்தின் வல்லரசு. இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் நேரடியாகத் தலையீடு செய்த நாடு. அதன் பயனாக இலங்கை – இந்திய ஒப்பந்தம்கூட கைச்சாத்திடப்பட்டது. அதனால் உருவானது 13ஆவது திருத்தம் மாகாணசபை முறைமை. ஆனால், இந்தியாவால்கூட இலங்கை அரசு மீது அழுத்தத்தைப் பிரயோகித்து காரியங்களைச் செய்விக்க முடியவில்லை. இலங்கை அரசின் போக்குகளுக்கு எல்லாம் எடுபட்டுச் செல்லவேண்டியிருக்கின்றது. இது தொடர்பில் இந்தியா மீது நிறைய விமர்சனங்கள் உண்டு. இவ்வாறானதொரு சூழலில்தான் தற்போதைய அரசியல் சூழலை இந்தியா கையில் எடுத்திருக்கின்றது.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியாக தேர்தலில் போட்டியிடும் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப்., தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றின் பிரதிநிதிகளை இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே சந்தித்திருந்தார். இந்தச் சந்திப்பில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தல் மற்றும் மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் பேசப்பட்டிருந்தது. அதனையடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மூன்று நாள்கள் பேச்சுக்கு அழைப்பு விடுத்திருந்தார். அதிகாரப்பகிர்வு தொடர்பில் பேசுவதற்கும் முன்வந்தார். 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று விடுத்த அறிவிப்புடன் பேசாமல் ஒதுங்கிக் கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே, அதிகாரப்பகிர்வு தொடர்பில் பேசுவதற்கு அழைக்கும் நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. ஜனாதிபதியுடன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி தனித்துச் சந்திப்பதற்கான திகதி குறிக்கப்பட்ட பின்னர், இந்தியத் தூதுவர் பாக்லே அந்தக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனை நேரில் தேடிச் சென்று சந்தித்தார். ஜனாதிபதியுடனான பேச்சுக்கள் தொடர்பிலும் இந்த சந்திப்பின்போது பேசியிருந்தார்.


இந்தப் பின்னணியில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்திய கையோடு நேரடியாக இந்தியத் தூதுவரை, தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சம்பந்தன், அந்தக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா, அந்தக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்ற பேச்சில் உரையாடப்பட்ட விடயங்கள் அனைத்தையும் இந்தியத் தூதுவருக்கு அவர்கள் எடுத்துரைத்துள்ளனர்.

இலங்கை அரசாங்கத்துக்கு இதனூடாக இந்தியா தெளிவான செய்தியையே சொல்லியிருக்கின்றது. ''நாங்கள் மூன்றாம் தரப்பாக – மத்தியஸ்தமாக பார்த்துக்கொண்டிருக்கின்றோம். கடந்த காலங்களைப்போன்று இழுத்தடிப்புக்கள் செய்யவேண்டாம்'' என்பதே இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா சொல்லியுள்ள செய்தி. இந்தியாவுக்குச் செல்வதற்கு எதிர்பார்த்துள்ள ஜனாதிபதி ரணிலுக்கும், இந்தியாவின் ஒத்துழைப்பை நம்பிக்கொண்டிருக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் இந்தியாவின் செய்தி புரிந்திருக்கும்.

நாளொரு நல்வார்த்தை

"நிச்சயம் வாழ்க்கை உங்களை அடித்துக் கீழே தள்ளும் அப்போது மீண்டும் எழுந்து நிற்பவன் மட்டும் வெற்றியடைகின்றான்"

– ஜாக்கிசான்



# வங்கிகளின் நிலைத்தன்மையை மத்திய வங்கி உறுதிப்படுத்தும்!

## நந்தலால் வீரசிங்க உறுதி



**கொழும்பு, மே 12**

**எந்த வகையான உள்நாட்டுக் கடன் மேம்படுத்துதலிலும் வங்கி முறைமையின் ஸ்திரத்தன்மை மற்றும் பொது வைப்புகளின் பாதுகாப்பை மத்திய வங்கி உறுதி செய்து பாதுகாக்கும் என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.**

எதிர்பார்க்கப்பட்டதை விடவும் மிகவேகமாகப் பணவீக்கம் வீழ்ச்சியடைந்துவரும் நிலையில், அதற்குச் சமாந்தரமாக வட்டி வீதங்களும் வீழ்ச்சியடையும் என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க எதிர்வுகூறியுள்ளார்.

கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொருளியல் கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றியபோதே ஆளுநர் நந்தலால் வீரசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பணவீக்கம் நாம் எதிர்பார்த்ததை விடவும் மிக வேகமாக வீழ்ச்சியடைந்துவருகின்றது. அதனுடன் இணைந்ததாக உயர்மட்டத்தில் காணப்பட்ட வட்டிவீதங்கள் தற்போது வீழ்ச்சியடைந்து வருகின்றன. அதுமாத்திரமன்றி கடன்மறுசீரமைப்புச் செயன்முறை தொடர்பில் முழுமையாக அறிவித்ததன் பின்னர், சந்தை வட்டி வீதங்கள் மேலும் விரைவாக வீழ்ச்சியடையும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றார். (எ-இ)

## மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, மே 12

மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு வர்த்தமானியில் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தனிப்பட்ட பிரேரணையாக இந்தச் சட்டவரைவை முன்வைத்தார்.

அதன்படி இந்தப் புதிய சட்டவரைவின் மூலம் 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டம் நீக்கப்படவுள்ளது.

புதிய திருத்தச் சட்டவரைவு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டால் பழைய வாக்களிப்பு முறையிலேயே மாகாணசபைத் தேர்தலை நடத்தமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## அமைச்சரவை மாற்றம் ஒத்திவைப்பு

கொழும்பு, மே 12

அமைச்சரவையை மாற்றியமைக்கும் தீர்மானத்தை காலவரையறையின்றி ஒத்திவைத்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அமைச்சரவை மாற்ற விவகாரத்தால் தேவையற்ற சர்ச்சைகள் ஏற்பட்டு வருவதால் அரசியல் குழப்பங்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் ஒத்திவைப்புத் தீர்மானத்தை மேற்கொண்டதாக தெரியவருகிறது. புதிய ஆளுநர்கள் நியமன விடயமும் இழுபறி நிலையில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. (ஒ-இ)

நாளை

13.05.2023
சனிக்கிழமை
சித்திரை 30

சுபநேரம் : 02.54 – 04.24
ராகுகாலம் : 08.54 – 10.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமக்கந்தன் பெருவிழா மரபுரிமைகள் பேண ஏற்பாடு!

## தமிழ்ச் சைவப்பேரவை வேலைத்திட்டம்

**யாழ்ப்பாணம், மே 12**

**கதிர்காமக்கந்தன் திருவிழாவில் இடம்பெறும் ஆடிவேல் விழா மற்றும் யாத்திரைக் காலம் என்பவை மரபுரிமைகளைப் பேணி நடைபெற தமிழ்ச் சைவப் பேரவை வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளது.**

இதுதொடர்பில் தமிழ்ச் சைவப் பேரவை நிர்வாகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இம்முறை சித்திரையில் இரண்டு பௌர்ணமிகள் வந்தமையால் கண்டிப் பெரஹறா முன்கூட்டி நடத்தப்பட்டமையால் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

எதிர்வரும் காலங்களில் சரியான - வழமையான முறையில் திருவிழா நடைபெற ஆடிவேல் விழா மற்றும் யாத்திரைக் காலம் உள்ளிட்டவற்றை சிறந்த முறையில் ஒழுங்கமைக்க வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும்.

வெருகல் முதல் உகந்தை வரையான முருகன் ஆலயங்களை ஒட்டியதான யாத்திரைகளுக்கு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படும்.

விரைவில் சந்நிதியான் ஆச்சிரமத்துடன் கலந்துரையாட, நிகழ்நிலையில் கூட்டங்களை தமிழ்ச் சைவப் பேரவை ஒழுங்கு செய்யவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் யாத்திரை தொடங்கும் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோக னதாஸ் சுவாமிகள் மற்றும் அம்பாறை உகந்தை முருகனில் யாத்திரிகர்களுக்கு வசதிகளை ஒருங்கிணைக்கும் சைவநெறிக்கூடத் தலைவர் கணேசன் ஆகியோரை இணைப்பாளர்களாகக் கொண்டு விடயங்கள் அணுகப்பட உள்ளன.

எதிர்வரும் காலங்களில் தமிழ்ச் சைவப் பேரவை வடக்கு - கிழக்கு தழுவிய யாத்திரிகர் குழுவின் பங்குபற்றுதலுடன் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் - என்றுள்ளது. (ச-66)

# ஜனாதிபதி வேட்பாளராக சஜித்தை களமிறக்க முடிவு

கொழும்பு, மே 12

அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நிறுத்தப்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டம், கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அப்போது சமகால அரசியல் மற்றும் கட்சியின் அடுத்த கட்ட நகர்வுகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

2024 ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் பரந்துபட்ட அரசியல் கூட்டணியை அமைப்பதற்கு கட்சியின் செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது.

கட்சியின் முடிவை மீறுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பதற்கும், கட்சி முடிவுக்கு கட்டுப்படாதவர்கள் வெளியேறலாம் எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அரசுடன் இணைவதில்லை எனவும், அமைச்சுப் பதவிகளை ஏற்பதில்லை எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (ஒ-14,44)

# பௌத்த சின்னங்கள் மீதே சிவலிங்கம் பிரதிஷ்டையாம்

## 'கண்டுபிடிப்பாளர்' சரத் வீரசேகர

கொழும்பு, மே 12

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பௌத்த சின்னங்கள் அழிக்கப்பட்டு அதன் மீது சிவலிங்கம், விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. சிங்களவர்களின் பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு பொறுமையை சோதிக்க வேண்டாம் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் சரத் வீரசேகர மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கை சிங்கள பௌத்த நாடு என்பதற்கு வரலாற்று ரீதியில் பல சான்றுகள் உள்ளன. பௌத்த தொல்பொருள் சின்னங்கள் நாடு முழுவதும் காணப்படுகின்றன. ஆகவே பௌத்த மத உரிமைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இலங்கையில் வாழும் அனைவருக்கும் உண்டு.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் பிரிவினைவாத அரசியல்வாதிகள் பௌத்த மதத்துக்கும், பௌத்த புராதன தனித்துவத்துக்கும் எதிராகத் திட்டமிட்ட வகையில் செயற்படுகிறார்கள். பௌத்த மதத்தை அழிக்கிறார்கள். பௌத்த மத வழிபாடுகளுக்கு பல்வேறு வழிகளில் தடையேற்படுத்துகிறார்கள். வெடுக்குநாறி பகுதியில் பௌத்த புராதன சின்னங்கள் அழிக்கப்பட்டு அதன் மீது சிவலிங்கம் உட்பட விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

வடக்கில் யுத்தம் தீவிரமடைந்த காலத்தில் கொழும்பில் இந்துக்கள் மத வழிபாடுகளில் ஈடுபட்டார்கள், தேர் இழுத்தார்கள். சிங்கள பௌத்தர்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார்கள். ஆகவே சிங்களவர்களின் பொறுமைக்கும் எல்லையுண்டு. அந்தப் பொறுமையை தமிழ் பிரிவினைவாத அரசியல்வாதிகள் சோதிக்கக் கூடாது.

தமிழ் அரசியல்வாதிகளுடன் பேச்சில் ஈடுபட முன்னர் நாட்டில் இனப்பிரச்சினை என்பதொன்று உள்ளதா? என்பதை ஜனாதிபதி ஆராய வேண்டும். இல்லாத பிரச்சினைகளை தோற்றுவித்து அதனை இனப்பிரச்சினை என தமிழ் அரசியல்வாதிகள் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். ஆகவே பௌத்த மத மரபுரிமைகளை பாதுகாக்க ஜனாதிபதி விசேட கவனம் செலுத்த வேண்டும் எனபதை வலியுறுத்தவுள்ளோம் -என்றார். (ம)

# அரசாங்க மருத்துவமனைகளில் கட்டணத்துடன் சிகிச்சை அறை

## அமைச்சரவை அனுமதி

அரசாங்க மருத்துவமனைகளில் கட்டணம் செலுத்தும் சிகிச்சை அறைகளை ஸ்தாபிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்ததாவது:-

தனியார் மருத்துவமனைகளில் செலவு அதிகமாக இருப்பதால், அரச மருத்துவமனைகளிலும் கட்டணம் செலுத்தும் அறைகளை உருவாக்குமாறு பொதுமக்கள் வைத்த கோரிக்கைக்கு அமைய இந்தத் திட்டம் முன்மொழியப்படுவதாக ஜனாதிபதி தனது பாதீட்டு உரையில் தெரிவித்தார்.

அதன்படி, இலங்கையர்கள் மற்றும் வெளிநாட்டவருக்காக, நாடளாவிய ரீதியிலுள்ள மருத்துவமனைகளில் இவ்வாறான கட்டணம் செலுத்தும் அறைகள் ஸ்தாபிக்கப்படவுள்ளன. முதற்கட்டமாக தேசிய மருத்துவமனைகளில் இந்தக் கட்டணம் செலுத்தும் முறைமை அறிமுகப்படுத்தப்படும் - என்றார். (எ-14-இ)

# கதவு திறந்தேயுள்ளது எவரும் போகலாம்

## சஜித் ஆவேசம்

அரசுப் பக்கம் பாய விரும்பினால் தாராளமாகப் போகலாம். கதவு திறந்தே உள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆவேசத்துடன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசியல் நிலைவரங்கள் பற்றிக் கலந்துரையாடுவதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம், கொழும்பில் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தலைமையில் கடந்தவாரம் இடம்பெற்றது.

அதில் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.க்கள் அரசின் பக்கம் பாய்வது பற்றியும் பேசப்பட்டது. அது தொடர்பில் சஜித் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்துகையில்,

எனது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசுப் பக்கம் போகமாட்டார்கள் என்று நான் நம்புகின்றேன். அதையும் தாண்டி யாரும் போக விரும்பினால் நான் அவர்களைப் பிடித்துக்கொண்டு இருக்க மாட்டேன். தாராளமாகப் போகலாம். கதவு திறந்தே உள்ளது எனத் தெரிவித்தார். (ஒ-14-22)

# நாட்டை ஆட்சிசெய்ய அருகதையற்றவர் சஜித்

## நவீன் திஸநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மே 12

அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்படும்போது நழுவிச்சென்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அடுத்த வெசாக் தினத்தின்போது ஆட்சியமைப்பேன் எனக் கூறுவது நகைச்சுவைக்குரியது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் நவீன் திஸநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டின் அதிகாரத்தைப் பொறுப்பேற்றுக்கொள்ளுமாறு தெரிவித்தபோது, அதனை ஏற்றுக்கொள்ளாமல் பல்வேறு காரணங்களைக் கூறி நழுவிச்சென்றார். நாடு வங்குரோத்தாகியபோது மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு யார் தீர்வைப் பெற்றுக்கொடுப்பது என்ற சவாலிலிருந்து அவர் தப்பியுள்ளார். அவ்வாறான ஒருவர் தலைமைத்துவத்தை எவ்வாறு நடத்துவார்?

நாடு வங்குரோத்து அடைந்திருந்த நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார். அந்தச் சவாலை தற்போது அவர் வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறார். நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தும் முயற்சியில் வெற்றி கண்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின்



உதவியின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே ஜனாதிபதியின் இலக்காகும். அதற்காக கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

எதிர்க்கட்சிகள் அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்களையும் பொய்ப்பிரசாரங்களையும் மேற்கொண்டு ஆட்சியமைப்போம் எனக் கட்டியம் கூறுகின்றன. இது வேடிக்கையாகவுள்ளது- என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாடசாலைக் கட்டடத்திலிருந்து குதித்த மாணவி படுகாயம்!

கொழும்பு, மே 12

கண்டி கட்டுகஸ்தோட்டை மகளிர் உயர்தரப் பாடசாலையின் கட்டடத்திலிருந்து குதித்து மாணவி ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

10 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தைச் சேர்ந்த மாணவியே இவ்வாறு படுகாயமடைந்தவராவார். மாணவி பாடசாலையின் மாணவத் தலைவி எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாணவி கடந்த செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் பாடசாலையின் மூன்றாவது மாடியில் இருந்து குதித்துள்ளார்.

கீழே குதித்ததில் படுகாயமடைந்த மாணவி, கண்டி தேசிய மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எனினும் மாணவியின் முதுகெலும்பு பலத்த சேதமடைந்துள்ளது என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஒ-14-இ)

## கடன் வழங்குநர்கள் இணையவழிக் கூட்டம்

கொழும்பு, மே 12

இலங்கையின் சகல கடன் வழங்குநர்களும் பங்கேற்ற கலந்துரையாடலொன்று கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் கண்காணிப்பு மட்டத்தின் அடிப்படையில் சீனாவும் பங்கேற்றுள்ளது.

ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் இணையவழிக் கலந்துரையாடலில் பங்கேற்றதுடன், இலங்கையின் அனைத்து கடன் வழங்குநர்களும் தனித்தனியான கலந்துரையாடல்களை நடத்துவதற்கு பதிலாக பொதுவான தளத்தை உருவாக்குவதே இந்தக் கலந்துரையாடலின் நோக்கமாகும்.

இரு தரப்பு கடன் வழங்குநர்களுக்கு 7.1 பில்லியன் டொலரையும், சீனாவுக்கு 3 பில்லியன் டொலரையும் இந்தியாவுக்கு 1.6 பில்லியன் அமெரிக்க டொலரையும் பாரிஸ் கிளப்புக்கு 2.4 பில்லியன் டொலரையும் இலங்கை கடனாகச் செலுத்த வேண்டியுள்ளது.

12 பில்லியன் டொலருக்கு அதிகமான யூரோ பிணைமுறிகள் மற்றும் 2.7 பில்லியன் டொலர் பெறுமதியான வணிகக் கடன்கள் தொடர்பில் மீண்டும் கலந்துரையாடும் நோக்குடன் இலங்கை அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ள பின்புலத்திலேயே இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

13 பில்லியன் டொலருக்கும் அதிகமான உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்கு மேலதிகமாகவே இந்தக் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது. (எ-இ)



# பெறுகை அறிவித்தல்

**இலங்கை சுங்கத் திணைக்களத்தின் காங்கேசன்துறை துறைமுகத்தில் பணியாற்றும் இலங்கை சுங்கத் திணைக்கள அலுவலர்களின் விடுதி வசதிகளுக்காக இரண்டு கட்டடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல்.**

01. காங்கேசன்துறை துறைமுகத்தில் பணியாற்றும் இலங்கைச் சுங்கத் திணைக்கள அலுவலர்களின் விடுதி வசதிகளுக்காக பின்வரும் வசதிகளுடன் கூடிய இரண்டு கட்டடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| | ஆண் அலுவலர் விடுதி | | பெண் அலுவலர் விடுதி |
|---|---|---|---|
| 01 | தரை ஓடு (Tile) பதிக்கப்பட்டு, இணைப்பு கழிப்பறை வசதிகளுடன் குளியலறை வசதிகளைக் கொண்டுள்ளதும், விதானம் (Ceillng) மற்றும் தரை ஓடு பதிக்கப்பட்ட, ஆகக் குறைந்தது 08 அறைகளை அல்லது அதிகபட்சமாக கொண்டுள்ளதுமான 10 அறைகளைக் கொண்டுள்ளதுமான விடுதிக் கட்டடமொன்றாக இருத்தல். | 01 | தரை ஓடு (Tile) பதிக்கப்பட்டு, இணைப்பு கழிப்பறை வசதிகளுடன் குளியலறை வசதிகளைக் கொண்டுள்ளதும், விதானம் (Ceiling) மற்றும் தரை ஓடு பதிக்கப்பட்ட, 04 அறைகளைக் கொண்டுள்ளதுமான கட்டடமொன்றாக இருத்தல் |
| 02 | நீர் மற்றும் மின்சார வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும் | 02 | நீர் மற்றும் மின்சார வசதிகளைக் கொண்டிருத்தல். |
| 03 | காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து 20 கி.மீ க்கு உட்பட்டதாக அல்லது அதற்கு கிட்டிய வகையில் பிரதான பாதையினை முன்னோக்கியதாக இருத்தல் | 03 | காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து 20 கி.மீ க்கு உட்பட்டதாக அல்லது அதற்கு கிட்டிய வகையில் பிரதான பாதையினை முன்னோக்கியதாக இருத்தல் |
| 04 | ஒரே நேரத்தில் குறைந்த பட்சம் 03 வாகனங்களை நிறுத்தி வைக்க முடியுமாக இருத்தல். | 04 | ஒரே நேரத்தில் குறைந்த பட்சம் 02 வாகனங்களை நிறுத்தி வைக்க முடியுமாக இருத்தல். |
| 05 | அனைத்து அறைகளும் வாயு சீராக்கல் வசதிகளையும் மண்டப அறை மின் விசிறி வசதியினையும் கொண்டிருத்தல். | 05 | அனைத்து அறைகளும் வாயு சீராக்கல் வசதிகளையும் மண்டப அறை மின் விசிறி வசதியினையும் கொண்டிருத்தல். |
| 06 | அறைகளுக்கும் தேவையான தளபாடங்களும் வழங்கப்படுதல் வேண்டும். அதற்கமைய, ஒவ்வொரு அறைக்கும்.<br>1. இரண்டு கட்டில்கள்<br>2. இரண்டு புடைவை இறாக்கைகள்<br>3. மேசை மற்றும் கதிரை (ஒவ்வொன்றும்)<br>4. அலுமாரி ஒன்றினையும் வழங்குதல் | 06 | அறைகளுக்கும் தேவையான தளபாடங்களும் வழங்கப்படுதல் வேண்டும். அதற்கமைய, ஒவ்வொரு அறைக்கும்.<br>1. இரண்டு கட்டில்கள்<br>2. இரண்டு புடைவை இறாக்கைகள்<br>3. மேசை மற்றும் கதிரை (ஒவ்வொன்றும்)<br>4. அலுமாரி ஒன்றினையும் வழங்குதல் |
| 07 | கட்டடத்தினைச் சுற்றி பாதுகாப்பு வேலி அல்லது சுற்றுச்சுவர் அமைக்கப் பட்டிருத்தல். | 07 | கட்டடத்தினைச் சுற்றி பாதுகாப்பு வேலி அல்லது சுற்றுச்சுவர் அமைக்கப் பட்டிருத்தல். |

02. மேற்கூறிய வசதிகளுடன் கூடிய கட்டடமொன்றினை நீங்கள் வைத்திருப்பின், பின்வரும் தகவல்களுடன் முத்திரையிடப்பட்ட கடித உறையில் உங்கள் விலை மனுக்களை, இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்திற்கு அமைய தமிழ் அல்லது ஆங்கில மொழியில் தயாரித்து, **சுங்கப் பணிப்பாளர், சேவை வழங்கல் பணிப்பகம், 6 ஆம் மாடி, சுங்க இல்லம், இல. 40, பிரதான வீதி, கொழும்பு 11 என்ற முகவரிக்கு 2023.05.24 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கப்பெறும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.** அவ்வாறின்றேல், இத்திணைக்களத்தின் 6 ஆம் மாடியில் அமையப்பெற்றுள்ள சேவை வழங்கல் பணிப்பகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியினுள் இடப்படுதல் வேண்டும்.
    i. கட்டடத்தின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்கான ஒப்பாவணத்தின் தெளிவான பிரதியொன்று அல்லது முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆவணமொன்று
    ii. இட அமைவிடத்தினை எடுத்துக் காட்டுகின்ற கட்டடத்தின் மாதிரிப் படம்
    iii. கட்டடத்தில் காணப்படுகின்ற வசதிகள்
    iv. மாத வாடகை (ரூ.)
    v. வீட்டுப் பாவனைப் பொருட்கள் ஒன்வொன்றும்.
        1. குளிர்சாதனப் பெட்டி 2. சலவை இயந்திரம் 3. சமயலறை எரிவாயு உருளை
        2. எரிவாயு அடுப்பு 4. ரைஸ் குக்கர் 5. தொலைக்காட்சிப் பெட்டி மற்றும்
    vi. ஏனையவை

03. முத்திரையிடப்பட்ட உறையின் இடது பக்க மேல் மூலையில் "காங்கேசன்துறை துறைமுகத்தில் பணியாற்றும் இலங்கை சுங்கத் திணைக்கள அலுவலர்களுக்கு விடுதி வசதிகளை வழங்கல்" என்று குறிப்பிடப்படுதல் வேண்டும்.

04. விலைமனுக்கள் ஏற்கப்படுவதானது 2023.05.24 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முடிவடைகிறது. விலைமனுக்களை ஏற்பதற்கான காலம் முடிவடைந்து, உடனடுத்து அவை உடனடியாகத் திறக்கப்படும். இதில் கட்டட உரிமையாளர் அல்லது அவர் சார்பில் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் பங்கேற்கலாம்.

05. **சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களை ஏற்பது அல்லது நிராகரிப்பது தொடர்பிலான முழு அதிகாரமும் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினைச் சார்ந்துள்ளது.**

06. மேலதிக விபரங்களை 011- 2221680 என்ற இலக்கத்திலுள்ள சுங்கப் பணிப்பாளரினை (சேவை வழங்கல்) அல்லது 0212220691 என்ற இலக்கத்திலுள்ள பிரதி சுங்கப் பணிப்பாளரினை (யாழ்ப்பாணம்) தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தவிசாளர்,**
**திணைக்களம் சார் பாரியளவிலான பெறுகைக் குழு,**
**இலங்கை சுங்கத் திணைக்களம், சுங்கத் தலைமைக் கட்டடம், இல.40, பிரதான வீதி, கொழும்பு 11.**

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் காங்கேசன்துறை துறைமுகத்தில் பணியாற்றும் இலங்கை சுங்கத் திணைக்கள அலுவலர்களின் விடுதி வசதிகளுக்காக இரண்டு கட்டடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல்.

விலைமனு ஏற்பிற்கான இறுதித் திகதி 2023.05.24 மற்றும் விலை மனுக்கள் திறக்கப்படுகின்ற நேரம் - பி.ப. 2.00

| ஆண் அலுவலர் விடுதிக்காக | | | | | பெண் அலுவலர் விடுதிக்காக | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | கட்டடம் கொண்டிருக்க வேண்டியுள்ள தேவைப்பாடுகள் | உண்டு | இல்லை | அளவு | கட்டடம் கொண்டிருக்க வேண்டியுள்ள தேவைப்பாடுகள் | உண்டு | இல்லை | அளவு |
| 01 | அறைகளின் எண்ணிக்கை | | | | அறைகளின் எண்ணிக்கை | | | |
| 02 | மின்சார வசதிகள் | | | | மின்சார வசதிகள் | | | |
| 03 | நீர் வசதி | | | | நீர் வசதி | | | |
| 04 | காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து தூரம் | | | | காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து தூரம் | | | |
| 05 | நிறுத்தி வைக்கமுடியுமான வாகனங்கள் எண்ணிக்கை | | | | நிறுத்தி வைக்கமுடியுமான வாகனங்கள் எண்ணிக்கை | | | |
| 06 | வாயு சீராக்கல் வசதி | | | | வாயு சீராக்கல் வசதி | | | |
| 07 | அறையொன்றிற்கு இரண்டு கட்டில்கள் | | | | அறையொன்றிற்கு இரண்டு கட்டில்கள் | | | |
| 08 | அறையொன்றிற்கு இரண்டு புடைவை இறாக்கைகள் | | | | அறையொன்றிற்கு இரண்டு புடைவை இறாக்கைகள் | | | |
| 09 | அறையொன்றிற்கு கதிரையொன்றும் மேசையும் | | | | அறையொன்றிற்கு கதிரையொன்றும் மேசையும் | | | |
| 10 | அறையொன்றிற்கு ஓர் அலுமரி | | | | அறையொன்றிற்கு ஓர் அலுமரி | | | |
| 11 | கட்டத்தினைச் சுற்றி பாதுகாப்பு வேலி அல்லது சுற்றுச்சுவர் | | | | கட்டத்தினைச் சுற்றி பாதுகாப்பு வேலி அல்லது சுற்றுச்சுவர் | | | |
| 12 | கட்டடத்தின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்கான ஒப்பாவணத்தின் தெளிவான பிரதி அல்லது முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆவணம் | | | | கட்டடத்தின் உரித்தினை உறுதிப்படுத்துவதற்கான ஒப்பாவணத்தின் தெளிவான பிரதி அல்லது முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆவணம் | | | |
| 13 | இட அமையியலை எடுத்துக் காட்டுகின்ற கட்டடதின் அமையில் வரை படம் | | | | இட அமையியலை எடுத்துக் காட்டுகின்ற கட்டடதின் அமையில் வரை படம் | | | |
| 14 | மாத வாடகை | | | | மாத வாடகை | | | |
| 15 | **வீட்டுப் பாவனைப் பொருள்கள்** | | | | **வீட்டுப் பாவனைப் பொருள்கள்** | | | |
| | குளிச்சாதனைப்பெட்டி | | | | குளிச்சாதனைப்பெட்டி | | | |
| | சலவை இயந்திரம் | | | | சலவை இயந்திரம் | | | |
| | சமையலறை எரிவாயு உருளை | | | | சமையலறை எரிவாயு உருளை | | | |
| | எரிவாயு அடுப்பு | | | | எரிவாயு அடுப்பு | | | |
| | ரைஸ் குக்கர் | | | | ரைஸ் குக்கர் | | | |
| | தொலைக்காட்சிப் பெட்டி | | | | தொலைக்காட்சிப் பெட்டி | | | |
| 16 | ஏனையவை | | | | ஏனையவை | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திலீபனின் நினைவிடத்தில்; முள்ளிவாய்க்கால் கஞ்சி!

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் நிகழ்வு நல்லூரில் உள்ள திலீபன் நினைவிடத்துக்கு முன்பாக நேற்று இடம்பெற்றது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அணித் தலைவி திருமதி வாசுகி சுதாகரன் தலைமையில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. ஈகைச் சுடர் ஏற்றி மலர்கள் தூவி தியாகதீபம் திலீபனுக்கும், இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்ட அனைத்து உறவுகளுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து திலீபனின் நினைவிடத்துக்கு அருகாக முள்ளிவாய்க்கால் கஞ்சி காய்ச்சப்பட்டு மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. (அ-ம-66)


"ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ"

# மரண அறிவித்தல்



## சிதம்பரப்பிள்ளை திருச்செல்வம்

இயமயாணன் உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை திருச்செல்வம் அவர்கள் நேற்று (11.05.2023) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை சிவபாக்கியம் தம்பதியரின் இளைய மகனும், செல்வரத்தினம் அவர்களின் அன்புச் சகோதரனும், கெங்காதேவி அவர்களின் பாசமிகு கணவரும், சர்மிளா, அனோஜன் ஆகியோரின் ஆசை அப்பாவும், சிறிஅஜந்தன் அவர்களின் அன்பு மாமனாரும், ஆத்மிகாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2023) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகள் - சர்மிளா குடும்பத்தினர்.

(CS 24843)A-1

# 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 03 . 05 . 1951



மறைவு 12 . 04 . 2023

கடந்த (12.04.2023) புதன்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி

## திருமதி சறோஜினிதேவி சகாதேவன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்றுமுன்தினம் (10.05.2023) புதன்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (12.05.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.163/2, சின்னக்கிணத்தடி ஒழுங்கை,
கண்டி வீதி, அரியாலை.

(CS/50381)AH-1

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## திருமதி மகேஸ்வரி அருளானந்தம்

கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி அருளானந்தம் நேற்று (11.05.2023) வியாழக்கிழமை அதிகாலை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருளானந்தம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - கனகம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - சொர்ணம்மா தம்பதிகளின் மருமகளும், குமாரசாமி, யோகீஸ்வரி, காலஞ்சென்ற கந்தசாமி, நாகேஸ்வரி, குருநாதசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2023) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணிக்கு இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(CS/50385)AH-1

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 11 . 1939



மறைவு 11 . 05 . 2023

## நவரத்தினம் இந்திராணி

ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் 27/4, வைமன் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட நவரத்தினம் இந்திராணி அவர்கள் நேற்று (11.05.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் நவரத்தினம் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி, முகாமையாளர் - யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இளையதம்பி தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, திலகவதி, அம்பிகை, பாலசுப்பிரமணியம், புனிதவதி, பகவதி மற்றும் சரவணபவானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், மகேஸ்வரி மற்றும் வன்னியசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2023) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

27/4, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.: 077 188 1575

தகவல்:
குடும்பத்தினர்

(CS 24840) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்பாலினச் சேர்க்கை சட்டவரைவு அரசமைப்புக்கு முரணானதல்ல

## உயர்நீதிமன்று அறிவிப்பு

**கொழும்பு, மே 12**

**தன்பாலின சேர்க்கையை குற்றமற்றதாக்கும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தச்சட்டவரைவு அரசமைப்புக்கு முரணானது அல்ல என உயர்நீதிமன்று குறிப்பிட்டுள்ளது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நாடாளுமன்றில் அறிவித்துள்ளார்.**

தன்பாலின சேர்க்கையை குற்றமற்றதாக்கும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி. தொலவத்தவால் சட்டவரைவு நாடாளுமன்றில் முன்வைக்கப்பட்டது.

இந்தச் சட்டவரைவு இலங்கையின் அரசமைப்புக்கு முரணானது எனத் தீர்ப்பளிக்கக் கோரி ஓய்வுபெற்ற இராணுவ பிரிகேடியர் கே.அதுல எச்.டி சில்வா, ஷெனாலி டி.வடுகே மற்றும் ஜெஹான் ஹமீட் ஆகியோரால் மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தச் சட்டவரைவு அரசமைப்பின் விதிகளை கடுமையாக மீறுவதாகவும் பௌத்த, இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நம்பிக்கைகளுக்கு ஏற்புடையதல்ல என்றும் மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த மனு 3 நீதியரசர்கள் கொண்ட அமர்வு உயர்நீதிமன்றம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மனு மீதான விசாரணையை கடந்த மாதம் நிறைவுசெய்தது உயர்நீதிமன்றம்.

இந்தச் சட்டவரைவின் சரத்துக்கள் ஏற்புடையதா? அல்லது முரணானதா? என்ற முடிவு சபாநாயகரிடம் இரகசியமாக பின்னர் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டது. தற்போது தன்பாலின சேர்க்கையை குற்றமற்றதாக்கும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தச்சட்டவரைவு அரசமைப்புக்கு முரணானது அல்ல என நீதிமன்று அறிவித்துள்ளது என்று சபாநாயகர் நாடாளுமன்றில் தெரிவித்தார். (ச-இ)

# மஸ்தானின் முடிவுக்கு எதிராகப் போராட்டம்!

## ஒரு சாராருக்கு மட்டும் மணலேற்ற அனுமதி

நாடாளுமன்ற உறுப்பினரும், மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானுக்கு எதிராக, மணல் ஏற்றும் தொழிலாளர்கள் நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு முன்பாக கடந்த செவ்வாய்க்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் வாக்குறுதிக்கு அமைவாக அவர்களின் போராட்டம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைவிடப்பட்டது.

இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததாவது:

நானாட்டான் பிரதேசத்தில் அருவியாறு பரிகாரி கண்டல் பகுதியில் பல வருடங்களாக பிரதேச செயலகம் மற்றும் உரிய திணைக்களங்களின் அனுமதி பெற்று மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகிறோம். இதன் மூலம் கனரக வாகனங்கள், உழவு இயந்திர உரிமையாளர்கள், மணல் ஏற்றும் கூலித் தொழிலாளர்கள் என்று 400க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வாழ்வாதாரம் பெற்று வருகிறார்கள்.

மேலும் இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருபவர்களுக்கு விவசாயக் காணிகள் உட்பட வேறு தொழில்கள் செய்வதற்கு வளங்களும் இல்லை. அத்துடன் அனைத்து வாகனங்களும் லீசிங் கட்டுப் பணம் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளது. இவ்வாறு இருக்கும்போது நானாட்டான் பிரதேசத்தில் உள்ள தொழிலாளர்களுக்கான மணல் அனுமதியானது மன்னார் மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவர் காதர் மஸ்தானால் நிறுத்தப்பட்டுள்ளது. இது எங்களின் வாழ்வாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது - என்றனர். அத்துடன், ஒரே அருவியாறானது நிர்வாக ரீதியாக நானாட்டான், முசலி பிரதேசம் என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முசலி பிரதேசத்துக்கு மாத்திரம் மணல் அகழும் அனுமதி வழங்கி, நானாட்டான் பிரதேச தொழிலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்படுவது ஏன்? மஸ்தான், இந்தச் செயற்பாடுகள் மூலம் சகோதரர்களாக வாழ்ந்து வரும் தமிழ், முஸ்லிம் மக்களிடையே முரண்பாடுகளைத் தோற்றுவிக்க முனைப்புக் காட்டுகிறாரா? என்றும் அவர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு வருகைதந்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் இந்த விடயத்துக்குத் தீர்வு பெற்றுத் தரப்படும் என்று தெரிவித்ததை அடுத்து போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. (ம-213)

# வன்முறைக் கும்பல் தாக்குதலுக்கு முயற்சி

## இருவர் தப்பினர்; ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 12

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை கலவட்டி திடல்பகுதியில் வசிக்கும் ஒருவரை தாக்குவதற்கென யாழ்ப்பாணத்தில் இருந்து வாளுடன் சென்ற வன்முறைக் கும்பலொன்றை, அந்தப் பகுதி இளைஞர்கள் சுற்றி வளைத்தபோது இருவர் தப்பியோடியுள்ளனர். ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

வன்முறைக் கும்பல் பயன்படுத்திய வாள், இரும்புக்கம்பி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவையும் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

முறைப்பாட்டுக்கமைய தருமபுரம் பொலிஸார் சந்தேகநபரை சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தியதுடன் தப்பியோடிய இருவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

கைதாகிய சந்தேகநபர் மீது யாழ்ப்பாணம், சுன்னாகம் பகுதியில் பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் வழக்குகள் உள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-113)

# பேஸ்புக் போலிக்கணக்கில் சிறுமிகள் துஷ்பிரயோகம்

## சந்தேகநபர் கைது

கொழும்பு, மே 12

பேஸ்புக்கில் போலிக்கணக்கை உருவாக்கி அதில் சிறுமிகளின் புகைப்படங்களை தவறாகப் பகிர்ந்த நபர் கணினி குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார். 40 வயதுடைய குறித்த சந்தேகநபர் தனியார் நிறுவனமொன்றில் கணக்கு எழுதுநராகக் கடமையாற்றி வருகிறார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு நீதிவான் நீதிமன்றில் சந்தேகநபர் முற்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 18ஆம் திகதி வரை சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்கு மாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

முல்லைத்தீவு, மே 12

முள்ளியவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கேப்பாபிலவு காட்டுப்பகுதியில் நாட்டுத் துப்பாக்கியுடன் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார் என்று முள்ளியவளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் அவரிடமிருந்து 20 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த சந்தேகநபரை சான்றுப் பொருள்களுடன் முல்லைத்தீவு நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்று முள்ளியவளைப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ஒ-14,19)

# சைவ வழிபாட்டிடங்களுக்கு சட்டங்கள் தேவையில்லை!

## சரத் வீரசேகரவின் கருத்துக்கு சிவசேனை அமைப்பு பதிலடி

படைத்துறையில் வல்லவராக இருப்பவர், தத்துவத்துறையில் வல்லவராக, சட்டத்துறையில் வல்லவராக இருப்பதில்லை என்பதை சரத் வீரசேகரவின் கூற்றுக்கள் தெளிவாகக் காட்டியுள்ளன. ஞானம் பெற்றவர் புத்தர். ஞானம் அற்றவர் சரத் வீரசேகர என்று இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் கடுமையாகச் சாடியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கை சிவபூமி. பாம்பையும், வேம்பையும், கல்லையும், மண்ணையும், நீரையும், தீயையும், வானையும், காற்றையும் சிவனாக வழிபடுவோர் சைவர். இயற்கையை ஐம்பூதங்களை சிவபெருமானாகக் கொள்வோர் சைவர். நாகர்களாய், இயக்கர்களாய், தமிழர்களாய், சைவர்களாய், இலங்கையின் ஆதிக் குடிகளாய் வாழ்கின்ற மக்களுக்கு இயற்கையே கடவுள். தாயின் கருவறையில் வினைவழிப் பிறந்த மனிதரைக் கடவுளாகத் தமிழர் கொள்வதில்லை, புத்தரையும், இயேசுவையும், முகமதுவையும் வழிபாட்டிடங்கள் அமைத்தே வழிபடவேண்டும். சைவர்களுக்கு - தமிழர்களுக்கு நிலமே கோயில், நீரே கோயில், காற்றே கோயில், வானமே கோயில், நெருப்பே கோயில். எனவே, தமிழர்கள், சைவர்களின் கோயில்கள் அரசுகளின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுக் கட்டப்பட்டவை அல்ல. வினைவழிக் கருவறையில் பிறந்து தெளிவு பெற்றவர்கள் போதித்தவர்கள் வழிவந்த மதங்கள் யாவும் இலங்கைக்கு வந்தேறி மதங்கள். அவையே அரசுகளின் சட்ட திட்டங்களுக்கு அமைய வழிபாட்டிடங்கள் அமைக்கும் மதங்கள். புத்த மதத்தவர் குடியேற்றம், சைவ மக்களின் நிலம் அபகரிப்பு, தொல்லியல் போர்வை, இவை காரணங்களாக அமையத் தான்தோன்றியாக அமைந்த சைவக் கோயில்களின் அருகே புத்த கோயில்களை அமைக்கிறார்கள். சரத் வீரசேகர உள்ளிட்ட புத்த மேலாதிக்க வாதிகள். இவர்கள் கேட்கிறார்கள், தென்னிலங்கையில் அமைந்த சைவக் கோயில்கள் சட்டத்துக்குள் அமைந்தனவா? என நிலத்தையும், நீரையும், காற்றையும், வானையும், நெருப்பையும் வழிபடச் சட்டம் எங்கே தேவை? புதிதாக வந்தவர் புத்தர். புதிதாக வந்தவர் இயேசு. புதிதாக வந்தவர் முகமது. இவர்கள் சார்ந்த வழிபாட்டிடங்கள் அமைக்கவே சட்டங்கள் தேவை - என்றுள்ளது. (அ-ம-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றிலிருந்து...

கப்பட்டவராவார்.

நேற்றுமுன்தினம் நித்திரைக்குச் சென்ற பெண்ணைக் காணவில்லை என்று வீட்டிலுள்ளோர் தேடியபோதே அவர் கிணற்றில் சடலமாகக் காணப்பட்டுள்ளார். இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)

## புதிதாக...

வைக்கப்படவுள்ளது.

2 ஆயிரத்து 700 ஆண்டுகளுக்குமுன் தாய்லாந்திலிருந்து திருகோணமலைக்கு வந்து இறங்கியதாகக் கூறப்படும் பிக்குகளை நினைவுகூரும் முகமாகவும், அவர்களை கௌரவப்படுத்தும் முகமாகவும் அவர்கள் வந்து இறங்கியதாக மகாவம்சத்தில் கூறப்படும் திருகோணமலை நெல்சன் திரையரங்குக்கு முன்னால் உள்ள தொல்பொருள் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடத்தில் குறித்த நிகழ்வு நாளைமறுதினம் காலை இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் தாய்லாந்தில் இருந்து புத்தர் சிலையோடு வருகை தருகின்ற 50 பிக்குகள் பங்குகொள்ளவுள்ளனர்.

தாய்லாந்திலிருந்து நாளை சனிக்கிழமை திருகோணமலைக்கு வருகைதருகின்ற 50 பிக்குகளும் நிலாவெளியில் விடுதி ஒன்றில் தங்குவார்கள். ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு கடற்படைதளத்துக்குச் சென்று காந்தி சுற்றுவட்டப் பகுதியில் கடல்வழியாக வந்து இறங்கி பின்னர் பாத யாத்திரை மூலமாக நெல்சன் திரையரங்கு முன்னால் உள்ள 4 அரச மரங்கள் இருக்கின்ற இடத்துக்குச் செல்லவுள்ளனர். அங்கு தாய்லாந்திலிருந்து அவர்களால் கொண்டுவரப்படுகின்ற 4 அடி உயரமான புத்தர் சிலையை அவ்விடத்தில் வைத்து 1 மணித்தியால பிரித் நிகழ்வு இடம்பெறும். அது நிறைவுபெற்றதும் ஜெயசுமராம விகாரைக்குச் சென்று அங்கிருந்து 11.30 மணியளவில் கண்டி நோக்கிய பாதயாத்திரையை அவர்கள் தொடங்குவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்த காலகட்டத்தில், 2005ஆம் ஆண்டு திருகோணமலை நகரில் புத்தர் சிலை வைக்கப்பட்டமையால் பெரும் கலவரம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-5)

# யாழ். கதலிக்கு சர்வதேச மவுசு

## வாரம் 22 ,000 கிலோ ஏற்றுமதிக்கு எதிர்பார்ப்பு

எதிர்வரும் மாதங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து கதலி வாழைப்பழ ஏற்றுமதித் திட்டத்தை விஸ்தரித்து யாழ்ப்பாணத்திலிருந்து வாராந்தம் 22 ஆயிரம் கிலோ கதலி வாழைப்பழம் ஏற்றுமதி செய்ய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

யாழ்ப்பாணம், புத்தூரில் அமைக்கப்பட்டுள்ள, வாழைப்பழ ஏற்றுமதி தொழிற்சாலையை நேற்றுமுன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டார்.

கிடைக்கின்ற வாய்ப்புக்களை சரியான முறையில் பயன்படுத்தி உள்ளூர் உற்பத்திகளை சர்வதேச சந்தைகளுக்கு எடுத்துச்செல்லுகின்றபோது, மக்களின் பொருளாதாரத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டுசெல்ல முடியும் என்று அவர் தெரிவித்தார். யாழ்ப்பாண கதலி வாழைப்பழங்கள் டுபாய் போன்ற நாடுகளுக்கு முதற்கட்டமாக ஏற்றுமதி செய்யப்பட்டன. அதில் 250 விவசாயிகள் நேரடியாக பயனடைந்துள்ளனர். எதிர்வரும் மாதங்களில் ஏற்றுமதியை விஸ்தரித்து நேரடியாகப் பயனடையும் விவசாயிகளின் எண்ணிக்கையை 700 ஆக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில், எதிர்வரும் மாதங்களில் யாழ்ப்பாணத்திலிருந்து வாரத்துக்கு 22 ஆயிரம் கிலோ கதலி வாழைப்பழம் ஏற்றுமதி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது என்று அவர் மேலும் கூறினார். (ச-இ)


# கிருஷ்ணா அடைவு கடை

## பதிவு இல J/ DS / BR / 472

மேற்குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2022 ஆம் ஆண்டு 31.06.2022 இற்கு முன்னர் அடகு வைத்த நகைகள் யாவற்றையும் 2023 ஆம் ஆண்டு ஆனி மாதம் 15 ஆம் திகதி (15.06.2023) இற்கு முன்னர் மீட்கவும். மீட்க முடியாவிட்டால் ஒரு பகுதி பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக் கொள்ளவும். புதுப்பிக்கத் தவறின் 15.06.2023 ஆம் திகதியன்று விற்கப்படும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**குறிப்பு:- 2022 ஆம் ஆண்டு 06ஆம் மாதம் 31 ஆம் திகதிக்கு முற்பட்ட நகைகள் யாவும் விற்கப்படும்.**

**இல.370, கே.கே.எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 4900 311**
**021 222 5180**

**உரிமையாளர்,**
**இல.09, கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 5046**

(CS/50361)AH-1



# ஆலய முகாமையாளர் மற்றும் காசாளர் தேவை

**கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் முகாமையாளராகவும் (Manager), காசாளராகவும் (Cashier)** கடமையாற்ற முன் அனுபவமுள்ள இருவர் தேவை. விண்ணப்பிப்பவர்கள் தங்களின் சுயவிபரக் கோவையுடன், இருவரின் உறுதிப்படுத்தலுடனும், வதிவிட பொலிஸ் பதிவுடன் பின்வரும் மின் அஞ்சல் முகவரிக்கு sivasubramaniya.kovil@gmail.com தங்களின் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

(குறிப்பு- வெளிமாவட்டங்களிலிருந்து விண்ணப்பிப்பவர்களுக்கு தங்குமிட வசதி தேவையாயின் ஒழுங்கு செய்து தரப்படும்)

(CR-39822)(k-1)



# ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம்

எமது நிலையத்தால் 14.05.2023 அன்று நடத்தப்பெறவிருந்த பரிசளிப்பு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டு எதிர்வரும் 21.05.2023 (ஞாயிற்றுக்கிழமை) பிற்பகல் 3.00 மணியளவில் நிலைய முன்றலில் நடைபெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**நிர்வாகம்**
**ஸ்ரீ காமாட்சி சனசமூக நிலையம்.**

(CS 24841) A-1


# மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 06 . 1927



மறைவு 11 . 05 . 2023

## சேனாதிராசா பொன்னையா

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் மருதங்கேணியை வசிப்பிடமாகவும், இல.74, ஜெயந்திநகர், கிளிநொச்சியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட சேனாதிராசா பொன்னையா (முன்னாள் ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர், சாவகச்சேரி) நேற்று (11.05.2023) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராசா அன்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கைலாசப்பிள்ளை, தங்கராசா, இராசதுரை மற்றும் சுந்தரலட்சுமியின் சகோதரனும், மகாதேவா, சரஸ்வதிப்பிள்ளை, மகாலிங்கம், சத்தியராணி, சத்தியதேவி, சிவராசா மற்றும் காலஞ்சென்றவர்களான சறோஜினிதேவி, சேனாதிராசாவின் அன்புத் தந்தையும், யோகம்மா, மங்கையற்கரசி, நகுலேஸ்வரன், அற்புதம் மற்றும் காலஞ்சென்றவர்களான தவக்குமார், தனபாலசிங்கம், சசி ஆகியோரின் மாமனாரும், ஜெகன், சுதா, காந்தன், ஜெகதா, சிந்துஜன், நிசாந்தன், தயா, தமயந்தி, அகல்யா, அகிலன், அருண், ராதா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2023) வெள்ளிக்கிழமை அவரது தற்காலிக இல்லத்தில் இடம்பெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 03 . 1948



மறைவு 10 . 05 . 2023

## திருமதி சண்முகராஜா யோகேஸ்வரி

கைதடி நுணாவில், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், சிவபுரம் பாலிநகர், வவுனிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகராஜா யோகேஸ்வரி நேற்றுமுன்தினம் (10.05.2023) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - காமாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மகளும், கார்த்திகேசு - அகிலாண்டம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சண்முகராசாவின் அன்பு மனைவியும், ஸ்காந்ததேவன் (சுரேஷ் - பாஸ்டர் ஜெயஜீவிய திருச்சபை), கீதாஞ்சலி (வவா - சுவிஸ்), பகீரதன் (அப்பன் - அவுஸ்திரேலியா), மணிமாறன் (மாறன் - தபால் ஊழியர், பாலிநகர்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தமயந்தி, மணிவண்ணன், ரெனி, சந்திரவதனா ஆகியோரின் மாமியாரும், ஜெருஷா, ஜீரணி, ஜனனன், பிரிசா, பிரித்திகா, கேதாரணி, துர்க்கா, டனுசிகா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற மங்களேஸ்வரி மற்றும் கோமளேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற மனோகரன் மற்றும் இராஜேந்திரா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.05.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பாலிநகர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சிவபுரம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/.50384)AH-1

தகவல்: குடும்பத்தினர்.

077 563 3632 - மாறன், 077 043 2388 - சுரேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதியுடன்...

ஆளும் தரப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தவிர்ந்த ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

காணாமற்போனோர் விடயம் ஆராயப்பட்டாலும் உறுதியான எந்தவொரு தீர்மானமும் எடுக்கப்படவில்லை. இந்தச் சந்திப்பில் காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தின் தலைவர் கலந்துகொண்டு, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் தமக்குக் கிடைத்த 20 முறைப்பாடுகள் தொடர்பில் தீவிரமாக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். அந்த விசாரணைகளில் முன்னைநாள் இராணுவத் துணைக்குழுக்களும் தற்போது அரசியல் கட்சிகளிலுள்ளவர்களுக்கும் தொடர்புகள் இருப்பதாக அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் மேலும் விசாரணைகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 1983ஆம் ஆண்டு முதல் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக விசாரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

அரசியல்கைதிகள் தொடர்பில் பேசப்பட்டபோது, நீதி அமைச்சர் விஜயதாஸ, பலரை விடுவித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இன்னமும் 30 பேர் மாத்திரமே உள்ளதாகவும் அவர்களில் 12 பேரை விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் கடந்த காலங்களில் பிணையில் விடுவிக்கப்பட்டவர்களுக்கு எதிரான வழக்குகளை தள்ளுபடி செய்யுமாறு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை முன்வைத்ததை சாதகமாக பரிசீலிப்பதாக நீதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். காணி அபகரிப்பு, காணி சுவீகரிப்பு, இராணுவத்தினர் வசமுள்ள காணிகள், தொல்பொருள் திணைக்களத்தின் அடாவடி, வனவளத் திணைக்களம், வன உயிரிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை என்பனவற்றின் மூலமான ஆக்கிரமிப்புக்கள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தத் திணைக்களங்களின் ஆக்கிரமிப்புக்களை உடனடியாக நிறுத்துமாறு கடந்த சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததை மீண்டும் நினைவுபடுத்திய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், நடைமுறையில் அவ்வாறு எதுவும் நிறுத்தப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார். தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளருடன் வடக்கு - கிழக்கு விடயங்கள் தொடர்பில் பேசி இணக்கத்தைக்காணுமாறும், அதில் இணக்கம் காணப்படாத விடயங்களை அடுத்த தடைவை பேசும்போது தீர்வைக் காணலாம் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், ஜனாதிபதியின் உத்தரவையே அதிகாரிகள் பின்பற்றாத நிலையில் எங்களின் பேச்சுக்களையா கேட்கப்போகின்றார்கள்? என்று கேள்வி எழுப்பியுள்ளார். இந்தச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர், வடக்கு - கிழக்கில் சுமார் 20 இடங்களில் தாம் அளவுக்கு அதிகமான காணிகளை கையகப்படுத்தியுள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளார்.

இதன்போது யாழ்ப்பாணத்தின் தையிட்டியில் அமைக்கப்பட் சட்டவிரோத விகாரைக்கு எதிரான போராட்டங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டது. அது தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். இராணுவத்தினரின் காணி விடுவிப்புக்கள் நடைபெற்றுவருவதாக சந்திப்பில் ஜனாதிபதி பணிக்குழாமின் தலைவர் சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக நீக்கப்படவேண்டும். பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் தேவையில்லை. தற்போதுள்ள சட்டநடைமுறைகளே போதுமானது என்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். ஆனால், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாத்திரம் இந்தச் சட்டங்களை ஆதரித்து அவை தொடர வேண்டும் என்று குறிப்பிட்டார். இதனால் ஏனைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அவர் முரண்பட்டார். சர்வதேச ரீதியாக பயங்கரவாதத்துக்குரிய சட்டங்கள் இருக்கின்றன என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். அப்படியாயின் பயங்கரவாத தடுப்புச் சட்ட வரைவை (சி.ரி.ஏ.) பரிசீலிக்கலாம். ஆனாலும் அதில் பல விடயங்கள் தமிழர் தரப்புடன் பேசி மாற்றியமைக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உண்மை நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது. இதன்போது தமிழர் தரப்புக்கள், சர்வதேசத்தின் பங்கேற்பு இல்லாத எதையும் ஏற்கத் தயாரில்லை என்று குறிப்பிட்டுள்ளனர். மேலும், தென்னாபிரிக்காவில் ஏற்பட்ட பிரச்சினைக்கு தீர்வு கண்ட பின்னரே அங்கு உண்மை நல்லிணக்க ஆணைக்குழு உருவாக்கப்பட்டது. இலங்கையில் ஏற்பட்ட பிரச்சினைக்கு தீர்வு இன்னமும் காணப்படாத நிலையில் உண்மை நல்லிணக்க ஆணைக் குழுவை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? என்று தமிழ்த் தரப்பு பிரதிநிதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். அதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாளை (இன்று) பிரச்சினைக்கான தீர்வைப் பற்றித்தானே பேசப்போகின்றோம் என்று பதிலளித்துள்ளார். (அ-ஓ,5)

## மன்னாரில்...

ரப்பட்டது. மன்னாரில் உள்ள வர்த்தக நிலையங்கள் மற்றும் வீடுகளுக்குச் சென்று அரிசி மற்றும் விறகு என்பன திரட்டப்பட்டு அவற்றைக் கொண்டு முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் கஞ்சி தொடர்பான தெளிவூட்டலை இளம் சந்ததிக்கும் வழங்கும் வகையில் துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. (அ-ம-125)

## ஆதிலிங்கேஸ்வரர்....

ரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

வெடுக்குநாறிமலையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த இறை விக்கிரகங்கள் உடைக்கப்பட்ட நிலையில் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் விக்கிரகங்கள் மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இதனையடுத்து ஆலயத்தில் பூஜை நிகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்ததுடன் நேற்றுமுன்தினம் சங்காபிஷேக நிகழ்வுகளும் இடம்பெற்றன. அதில் மழையையும் பொருட்படுத்தாமல் பெருமளவான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை விசாரணை ஒன்றுக்காக ஆலய நிர்வாகத்தினரை பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு நெடுங்கேணி பொலிஸாரால் நேற்றுமுன்தினம் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து ஆலயத்தின் பூசகர் மற்றும் நிர்வாக உறுப்பினர்கள் மூவர் உட்பட நால்வர் நேற்றுக் காலை நெடுங்கேணி பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுள்ளனர். விசாரணையின் பின்னர் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். ஆலய நிர்வாகத் தலைவர் செல்லத்துரை சசிக்குமார், செயலாளர் துரைராசா தமிழ்ச்செல்வன், நடராசா கலைச்செல்வன், ஆலயப் பூசகர் தம்பிராசா மதிமுகராசா ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர். நீதிமன்ற உத்தரவுக்கு மாறான வகையில், உடைந்த விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்யாமல் புதிய விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்தமை, ஆவுடையார் சிலை வைப்பதற்காக அடித்தளம் அமைத்து தொல்லியல் இடங்களை சேதப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் அவர்கள் மீது சுமத்தப்பட்டு நேற்றுமாலை அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். எனினும், வெடுக்குநாறிமலை தொடர்பான வழக்கில் மேற்படி நபர்கள் முறைப்பாட்டாளர்களாக இருப்பதால், அதே வழக்கில் அவர்களைச் சந்தேகநபர்களாகப் பெயரிட முடியாது என்று தெரிவித்த நீதிமன்று அவர்களை விடுவித்தது.

அத்துடன், வெடுக்குநாறிமலையில் இறை விக்கிரகங்களை உடைத்தவர்களை விரைந்து கைது செய்யுமாறும் நீதிமன்றம் பொலிஸாருக்கு அறிவுறுத்தியது. (அ-ம-110,26)

## யாழ்.பல்கலைக்கழக...

யைக் கண்டித்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் வவுனியா மருத்துவமனைச் சுற்றுவட்டத்தில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடுக்குநாறிமலை தமிழர்களின் சொத்து, தமிழர்களின் தொன்மையை அழிக்காதே, தொல்லியல் திணைக்களம் அரசின் கைக்கூலியா? உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியும், பொலிஸாருக்கும் தொல்லியத் திணைக்களத்துக்கும் எதிராகக் குரல்களை எழுப்பியும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாணவர்களுடன் பொதுமக்களும் உணர்வெழுச்சியுடன் போராட்டத்தில் கலந்துகொண்டனர். அத்துடன், வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக முள்ளிவாய்க்கால் கஞ்சியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் வழங்கப்பட்டது. (அ-ம-110)

## 500 மில். டொலர்...

மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். ஹர்ஷ டி சில்வா மேலும் தெரிவித்ததாவது:

மனித உரிமைகள், தொழிலாளர் உரிமைகள் மற்றும் நல்லாட்சி போன்ற விடயங்களை இலங்கை எவ்வாறு பின்பற்றியது என்பதை அடிப்படையாக வைத்தே 2024ஆம் ஆண்டு முதல் 2034ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்கு ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை வழங்குவதா? இல்லையா? என்பதை ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானிக்கும்.

இலங்கைக்கு அதிகளவு அந்நியச் செலாவணியை பெற்றுத்தரும் ஆடைதொழில்துறை இந்த வரிச்சலுகையிலேயே தங்கியுள்ளது. புதிய விதிமுறைகளின் கீழ் இலங்கை, பாகிஸ்தான் உட்பட ஆறு நாடுகள் ஜி.எஸ்.பி. வரிச்சலுகைக்கு விண்ணப்பிக்கவேண்டும். இவ்வாறானதொரு நிலையில், நாட்டின் அரசமைப்பை மீறும் வகையில் அமைந்துள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் ஜி.எஸ்.பி. வரிச்சலுகைகளை இலங்கை பெற்றுக்கொள்வதில் தாக்கத்தை ஏற்படுத்தும் - என்றார். (அ-ம)

## சிறுமிகளை...

கப்பட்டனர்.

இனிப்புப் பொருள்களை வழங்கி சிறுமிகளைக் கடத்த முற்பட்டபோது, சிறுமிகள் தப்பிச் சென்று பொதுமக்களிடம் இது தொடர்பில் தெரிவித்துள்ளனர். இதையடுத்து, கிராம மக்கள் இளைஞர்களின் உதவியுடன் வாகனத்தை விரட்டிச்சென்று மடக்கிப் பிடித்துள்ளனர்.

வாகனத்தில் வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர் இருந்தார் என்று பாதிக்கப்பட்ட சிறுமிகள் தெரிவித்துள்ளனர். எனினும், வாகனத்தைச் சோதனையிட்டபோது அவ்வாறு எவரும் இருக்கவில்லை. வாகனத்தில் இருந்த இருவர் தலைமன்னார் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்ட நிலையில், இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-56,26)

## அரகலய....

கொழும்பு, மே 12

நாட்டில் ஆபத்தான சூழ்நிலை உருவாகி வருகிறது. அமைதிவழிப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கு உடனடியாகப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் மிகவும் ஆபத்தான சூழ்நிலை உருவாகி வருகின்றது. நிகேஷல மீது கடுவலை முன்னாள் பிரதி மேயர் சந்திக அபேரத்னவால் ஒழுங்கமைக்கப்பட்ட குழுவொன்று நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தியுள்ளது. போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் பெயர்ப்பட்டியல் சமூக வலைத்தளங்களில் பகிரப்படுகின்றது. இந்தப் போராட்டத்தில் விளைவாகவே தற்போதைய ஜனாதிபதி பதவிக்கு வந்தார். ஆதலால், இது விடயத்தில் அவர் கூடுதல் கவனமெடுக்க வேண்டும். போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது நடத்தப்படும் தொடர் தாக்குதல்களின் ஒரு பகுதியே நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவமாகும்- என்றார். (அ-ம)

## யாழில் டெங்கு தீவிரம்!

யாழ்ப்பாணம், மே 12

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோயின் பரம்பல் தீவிரமாக அதிகரித்துள்ளது. இந்த நிலையில், எதிர்வரும் 16ஆம் மற்றும் 17ஆம் திகதிகளில் மாவட்ட ரீதியில் டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் யாழ். மாவட்டச் செயலகம் விடுத்துள்ள அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மழை காரணமாக டெங்கு நோய் பரப்பும் நுளம்புகள் அதிகரிப்பதற்கு அபாயநிலை காணப்படுகின்றது. இந்த நிலையில் நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கையை முன்னெடுக்காதுவிடின் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அடுத்துவரும் மாதங்களில் அதிகரித்துச் செல்லும் என அஞ்சப்படுகின்றது.

சுகாதாரத் திணைக்களம், உள்ளூராட்சி சபைகள், பிரதேச செயலகம் இணைந்து கழிவுக் கொள்கலன்களை உரியமுறையில் அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இந்தச் செயற்றிட்டம் தொடர்பான கால அட்டவணை கிராமசேவகர் ஊடாகப் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும். எனவே, பொதுமக்கள், பொது அமைப்புக்களைச் சேர்ந்தோரும் இந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றது - என்றுள்ளது. (அ-ம-66)

## போதையில் சாரத்தியம் இளைஞனுக்குச் சிறை!

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மதுபோதையில் மோட்டார் சைக்கிளை செலுத்திய குற்றச்சாட்டுக்காகக் கைதுசெய்யப்பட்ட இளைஞனுக்கு இரண்டு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

போதையில் வாகனம் செலுத்தியமை, சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை, தலைக்கவசம் அணியாது வாகனம் செலுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் அவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டார். விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் ஆனந்தராஜா சந்தேக நபருக்கு 65 ஆயிரம் ரூபா தண்டமும், இரண்டு மாதங்கள் சிறைத்தண்டனையும் விதித்தார். (அ-ம-26)

# கைது சட்டவிரோதமானது இம்ரான்கான் விடுதலை!

### நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் கைதுசெய்யப்பட்டமை சட்டவிரோதமானது என்று தெரிவித்துள்ள பாகிஸ்தான் உயர்நீதிமன்றம், அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறும் உத்தரவு பிறப்பித்தது.

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் கடந்த செவ்வாய்க்கிழமை இஸ்லாமாபாத் நீதிமன்றத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். ஊழல் வழக்கு விசாரணைக்காக வந்த அவரை பாகிஸ்தான் ரேஞ்சர் படை நீதிமன்ற வளாகத்தில் வைத்துக் கைதுசெய்தது. நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஒருவரைக் கைதுசெய்வதற்கு அனுமதி இல்லாத காரணத்தால் இம்ரான் கானின் கைது சட்டவிரோதமானது என்று தெரிவித்துள்ள பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் அவரை விடுவிக்குமாறு நேற்று மாலை உத்தரவிட்டது.

**பின்னணி என்ன?**

இம்ரான்கான் பாகிஸ்தான் இராணுவத்துக்கு எதிராகவும், அரசமைப்புக்கு எதிராகவும் அந்த நாட்டின் அரசியல் கலாசாரத்துக்கு எதிராகவும் அண்மையில் வெளிப்படையாகவே கருத்துத் தெரிவித்திருந்தார். அத்துடன் பாகிஸ்தான் இந்தியாவைப் பின்பற்ற வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார். இதையடுத்து அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்குத் தொடரப்பட்டது. இம்ரான்கானுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டதையடுத்து அவர் கைதுசெய்யப்படப் போகின்றார் என்ற அச்சத்தில் பாகிஸ்தான் எங்கும் போராட்டங்கள் இடம்பெற்றன. நாட்டின் அமைதியைக் கருத்திற்கொண்டு இம்ரான்கான் கைதுசெய்யப்படுவது தாமதிக்கப்பட்டது. இவ்வாறான தொரு பின்னணியிலேயே கடந்த செவ்வாய்க்கிழமை இம்ரான்கான் இஸ்லாமாபாத் நீதிமன்றத்துக்கு வந்ததும் அங்குவைத்து அவர் கைதுசெய்யப்பட்டார்.

இஸ்லாமாபாத், கராச்சியில் குறிப்பிட்ட இடங்களில் ஊரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, சுமார் 70 வாகன அடுக்குப் பாதுகாப்புடன் அவர் ரேஞ்சர் படையால் கைதுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம)


## வாடகைக்கு

கல்வியங்காடு, 3 ஆம் கட்டை, பருத்தித்துறை வீதியோரமாக கடை வாடகைக்குண்டு.

077 175 0746 (CS/50370) AH-1

## கணினி தட்டெழுத்தாளர் தேவை

சாவகச்சேரி நகரில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு கணினி தட்டெழுத்தாளர் தேவை.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

076 573 4507

## பணியாளர்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகைவியாபார நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை

- கணக்காளர்: A/L வர்த்தக துறையில் படித்த வடிவான கையெழுத்துடைய ஆண்/பெண் இருபாலாரும்
- கணினி தரவு பதிவாளர் (Data Entry Operator): O/L, ICT, A/L, Git படித்தவர்கள் (ஆண் / பெண்)
- விற்பனை உதவியாளர்: (ஆண் / பெண்)
- சிட்டை எழுதுனர்: வடிவான கையெழுத்து உடையவராக (ஆண் / பெண்)

(முன் அனுபவம் இல்லாதவர்களுக்கு வேலை கற்பிக்கப்படும்)

சுயவிபரக்கோவையுடன் முற்பகல் 10.00 மணிமுதல் நேரில் வரவும்

நியூ லலிதாஸ் ஜுவல்லறி

இல.30.32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயம்

## ஆலய குருக்கள் தேவை

சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்திற்கு ஆலய பரிபாலன சபையின் கட்டுப்பாட்டிற்கு அமைவாகவும் ஆகம விதிப்படியும் ஆலய நித்தியபூசை மற்றைய விசேட பூசைகள் செய்யக்கூடிய பிராமண குருக்கள் தேவை. விசேட பூசைகள் மாதாந்த கொடுப்பனவு உட்பட ரூபா ஒரு லட்சத்திற்கு (ரூபா. 100000.00) மேல் பெற முடியும். இவ் விளம்பர திகதியில் இருந்து 10 நாட்களுக்குள் கீழ் குறிப்பிட்ட விலாசத்திற்கு உங்கள் விண்ணப்பப்படிவங்களை அனுப்பவும்.

தலைவர் / செயலாளர்
ஸ்ரீ சிவசிதம்பரேஸ்வரர் ஆலயம்,
சித்தன்கேணி

மேலதிக விபரத்திற்கு - 0777 91 0951, 0773 11 4803. (CS 24842) A-1

## காணி விற்பனைக்கு உண்டு

* யாழ்ப்பாணம் புத்தூரில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
* நன்னீரூற்று
* குடியிருப்பு சூழவுள்ள பகுதி

பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.

(முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது).

ஒரு பரப்புக் காணியின் விலை மூன்று இலட்சம் (300,000/=)

தொடர்பு: 076 9119 371 (CS 24839) A-1

## கடை விற்பனைக்கு

மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் - 8.8 குளி (4.96 Perch) கடை விற்பனைக்கு

- மானிப்பாய் வீதி - காங்கேசன்துறை வீதி சந்தியிலிருந்து 150m தூரம் (வட மேற்குத் திசையில்)
- மானிப்பாய் வீதி - சிவன் கோவில் வீதி சந்தியில் இருந்து 200m தூரம் (தென் கிழக்குத் திசையில்)
- நன்னீர் கிணறு உள்ளது. (CS/50376)AH-1

0768 622 286 (Mobile)
0750 943 026 (Mobile) or
021 222 2133
+61 425 707 123 (Whatsapp)

## மணப்பெண் தேவை

01. உடுப்பிட்டி. இந்து கௌரவகுலம் (V). 1990. உத்திரட்டாதி. BSc, Civil Engnineer, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33731
02. நல்லூர் - மூளாய். இந்து கௌரவகுலம் (V). 1987. ஆயிலியம். BSc (Hons) Software Engineer, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32328
03. நல்லூர் - அளவெட்டி. இந்து. கௌரவகுலம் (V). 1984. மகம். Business Administration, Canada Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 29993
04. கந்தர்மடம் , இந்து. கௌரவகுலம் (V). 1977. உத்திரட்டாதி. MSc, IT (in UK), Canada Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 29640
05. இணுவில் - கோண்டாவில். இந்து. கௌரவகுலம் (V). 1986. ரோகிணி. Accountant, Norway Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 31506
06. கொக்குவில். இந்து. கௌரவகுலம் (V). 1990. விசாகம். Bio Engineering. Engineer, Norway Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 30569
07. கொக்குவில். இந்து. கௌரவகுலம் (V). 1989. மூலம். Graduate, Accountant, Denmark Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 28622
08. வேலணை. இந்து. கௌரவகுலம் (V). 1987. ஆயிலியம். BSc, Engineering, Newzealand Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27086
09. பருத்தித்துறை. இந்து. கௌரவகுலம் (V). 1986. மகம். BSc, Swiss Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 28387
10. திருநெல்வேலி. இந்து. கௌரவகுலம் (V). 1985. ரேவதி. Graduate, Network Administration, USA Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33507

(CS/50311)AH-1

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Whatsapp - 077 803 8193 Phone - 077 539 3728


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.